27

உ

செங்குந்த மித்திரன்

தொகுதி 2 ௨ பகுதி ௮ ௮

ஆவணி

1928-29

JL
Y592 C m211,N
N28.2.8
129804

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி,

தொகுதி - ௨] | விபவ௵ - ஆவணி௴ | [பகுதி - ௮

1928

உள்ளடக்கம்.


| | |
|---|---|
| இராமேஸ்வரம் மடம். | |
| அன்பர்களுக்கு அறிக்கை. | |
| பத்திரிகாசிரியர் முன்னுரை : சென்னையில் செங்குந்தர் விடுதி ... | ௨௱௬௫ |
| ஆராய்ச்சிப் பகுதி : தொடர்மொழி விளக்கம். | ௨௱௬௬ |
| பொது விஷயங்கள் : பொருட் சிறப்பு ... | ௨௱௬௯ |
| ஆலய வழிபாடு ... | ௨௱௭௩ |
| அறிவியல் பகுதி : ஞாயிற்றின் கதிர்கள் ... | ௨௱௭௪ |
| விதிமதி வாதம் ... | ௨௱௭௬ |
| ஐய வினாவிற்கு விடை .... | ௨௱௭௮ |
| சுகாதாரப் பகுதி : வாந்திபேதி காலரா ... | ௨௱௭௯ |
| இலகு வைத்தியமுறைகள் ... | ௨௱௮௧ |
| மாதர் பகுதி : க்ரிஸல்டா கதை ... | ௨௱௮௩ |
| தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க நிருவாக சபைக் கூட்டத்தின் தீர்மானங்கள்... | ௨௱௮௫ |
| செங்குந்தர் கிளர்ச்சி : தலைச்சங்க பிரசாரம். | ௨௱௮௬ |
| தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்துக்கு சந்தா, மகமை, நன்கொடை வசூல் ... | ௨௱௯௪ |
| செங்குந்தர் பஞ்சாங்கம் ... | ௨௱௯௬ |


## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

Registered No 1514

# இராமேஸ்வரத்தில் செங்குந்த முதலிமார் மடம்

இதைப்பற்றித் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் முயற்சியெடுக்கவேண்டுமெனச் 'சுதந்திரன்' பத்திரிகாசிரியர் எழுதியுள்ள குறிப்பைக் கவனித்தேன். இம்மடத்தின் நிலைமையை நேரில் கண்டுணர்வதற்குச் சென்ற சுற்றுப் பிரயாணத்தில் நானும் எனது நண்பர் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும் இராமேஸ்வரம் சென்றிருந்தோம். மடம் இப்பொழுது ஒரு கேவலமான குடிசையாக இருக்கின்றது. இதைக் கட்டுவதற்கு இரங்கூன் வியாபாரிகள் சிலர் மகமை ஏற்படுத்தி ஒரு செங்குந்த க ளிடத்தில் சேர்த்துவைத்திருப்பதாக எமக்குச் சில பொறுப்புள்ள கனவான்கள் மதுரையி இராமநாதபுரம் ஜில்லாவிலும் சொன்னார்கள். இதைப்பற்றிப் பல இடங்களிலும் எம பிரசாரத்தில் பேசிக்கொண்டு வந்தோம். எனினும், இப்பணம் தற்போது யாரிடத்திலிருக்கிற தென்பதற்கு எமக்கு ஆதாரங் கிடைக்கவில்லை. ஆகவே, இராமேஸ்வரம் செங்குந்த முதலிமார் மடத்துக்காக நன்கொடை அளித்த கனவான்கள், எப்பொழுது, யாரிடம், எவ்வளவு தொகை செலுத்தினர் என்பதை நமது சங்கத்துக்குக் கடிதமூலம் தெரியப்படுத்துவார்களாயின் பிறகு நடத்தவேண்டிய விவகாரங்களைக் கவனிக்க இயலும்.

தென்னிந்தியாவில் பல இடங்களிலுமுள்ள நம்மவர் மடங்களின் நிலைமையை நமது சங்கம் இப்பொழுது ஆராய்ந்து வருகின்றது. இவ்வாராய்ச்சிக்கு உதவக் கூடும் விவரங்களை நமது சங்கத்துக்குத் தெரியப்படுத்த விரும்பும் கனவான்கள் உடனே எழுதுவார்களாக.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
சென்னை,
1—9—28.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
அமைச்சர்.

---

# செங்குந்தமித்திரன்.

## சில முக்கியமான குறிப்புக்கள்.

(1) நமது பத்திரிகை ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் நான்காம் தேதி தபாலில் போடப்படும். இதில் தவறுதலேனும் தவக்கமேனும் நேராது. எந்தச் சஞ்சிகையாவது யாருக்காவது எம்மாதமேனும் கிடைக்காமலிருந்தால் அவர் தபால் அதிகாரிகளுக்கு மனு எழுதி எமக்கும் தெரிவிக்கவேண்டும்.

(2) சந்தாதாரர் எந்த மாதத்திற் சேரினும் தைமாதம் முதற்கொண்டே சேர்ந்ததாகக் கணக்கிடப்பட்டு அது முதலுள்ள சஞ்சிகைகள் அவர்களுக்கு சேர்த்தனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் அனுப்பும் கடிதங்களிலும் மணியார்டர்களிலும் அவரவர்களுடைய சந்தா நெம்பரைக் குறிப்பிட்டெழுதுதல் வேண்டும். சந்தா நெம்பர்கள் போடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

(4) புதிய சந்தாதாரர்கள் அனுப்பும் கடிதங்களிலும் மணியார்டர்களிலும் புதிய சந்தாதார் என்று குறிப்பிடுதல் வேண்டும்.

### விளம்பர விகிதங்கள்.

'செங்குந்த மித்திர'னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன் பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். மாதம் மாதம் 4,000 பிரதிகள் அச்சாகின்றன. ஜாதீய பத்திரிகைகளுள் இதற்கு மேலான பத்திரிகை யில்லை :—

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ பக்கம் | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |

இங்ஙனம் :
மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

தொகுதி - ௨ | விபவ௵ - ஆவணி௴ | பகுதி - ௮


2 SEP

முருகன் துணை.

தாமரை புரையும் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏமம் வைகல் எய்தின்று உலகே.—பெருந்தேவனார்.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### சென்னையில் செங்குந்தர் விடுதி

பல நண்பர்கள் எம்மைச் சென்னையில் ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் செங்குந்தர் மாணவர் விடுதியினைப்பற்றிய சில விவரங்களைத் தெரிவிக்க அடிக்கடி கேட்கின்றனர். சென்னையில் உயர்தரகல்வி பயிலவரும் செங்குந்த மாணவர்களின் நிலைமையினையும், அவர்களுக்கு நாம் உத்தேசித்துள்ள விடுதி எவ்வித அனுகூலத்தை யளிக்கு மென்பதையும் முன்னொரு சஞ்சிகையில் எழுதியுள்ளோம். இப்பொழுது இவ்விடுதி வியாபார நிமித்தமாகவும், கோர்ட்டு வியாச்சியங்களுக்கும், இதர அலுவல்களுக்கும் சென்னைக்கு வந்துபோகும் செங்குந்த கனவான்களுக்கு எவ்விதம் அனுகூலமளிக்கும் என்னும் விஷயமாகச் சிறிது விளக்கி, மற்றொரு சமயம் மாணவர்க்கும் மற்றவர்க்கும் உபயோகமாகக் கூடிய இவ்விடுதி எவ்வித அமைப்பினையும் நிர்வாகத்தினையும் உடையதாயிருக்க வேண்டு மென்பதையும், இதை அமைப்பதற்கு எவ்விதமான பொருளாதாரத்தை நாம் எதிர்பார்க்கின்றோம் என்பதையும் குறிப்பிட உத்தேசிக்கின்றோம்.

சென்னையில் உறவினர்களையோ நண்பர்களையோ உடைய செங்குந்தர்கள் வெகு சிலர். பெரும்பான்மையோர் வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வர அலுவலுள்ளவர்கள், சத்திரங்களில் சாப்பிட்டுவிட்டுத் தத்தமக்குச் சிறிது அறிமுகமான கடைகளிலோ கிடங்குகளிலோ அனுமதி பெற்று உறங்கித் தத்தம் வேலைகளை எவ்வளவு சீக்கிரமாக முடித்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக முடித்துக்கொண்டு, எப்பொழுது சொந்த ஊரை யடையப் போகிறோமென்னும் ஆவலுடன் திரும்பிவிடுகின்றனர். வெளிக்குப்போவதற்கும், குளிப்பதற்கும், நல்ல சாப்பாடு சாப்பிட்டுக் களைப்பாறிச் சௌகரியமாக உறங்குவதற்கும், பந்தோபஸ்தான இடத்தில் தமது பொருள்களை வைத்துக் கவலையற்றிருப்பதற்கும், தம்மினத்தாரோடு

அறிமுகமாகிப் பழகி புது நட்புக்களைத் தேடி இன்புறுதற்கும் அவர்களுக்குத் தற்போது ஒரு சிறிதும் வசதியில்லை.

நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் சென்னையில் நகரத்தார் மடங்களைக் கட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாடார்களும் வன்னியர்களும் சத்திரங்களும் தனி விடுதிகளும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். நம்மவர்களுக்குத்தான் இங்கு ஒரு தனி விடுதி இல்லை.

நம்மவர்களில் சிலர் கடல் தாண்டிச்சென்று இரங்கூன் சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு வியாபார நிமித்தமாகவும் பிழைப்பதற்காகவும் போகின்றனர். அவர்கள் அவ்விடங்களுக்குப் போகும்போதும் அங்கிருந்து திரும்பும்போதும் சென்னையில் தங்குவது அவசியமாகின்றது. சென்னையில் அவர்கள் தங்க நேரிடும் தருவாயில் அவர்கள் படும் அவஸ்தைகள் இவ்வள வவ்வளவல்ல. இனத்து விடுதியொன்று சென்னையில் இருக்குமானால் அவர்கள் பல அசௌகரியங்களுக்கு ஆளாக வேண்டியதில்லை.

ஆகவே நாம் ஏற்படுத்த இருக்கும் மாணவர் விடுதியின் ஒரு பிரத்தியேகமான பாகத்தை ஒரு சத்திரமாக அமைத்து வைக்க அவசிய மிருக்கின்றது. தேச சஞ்சாரிகள் அடிக்கடி வந்து இறங்கித் தங்கிப் போவதனால் கல்வி கற்கும் மாணவர்களுக்கு யாதொரு இடையூறும் ஏற்படா திருக்கும் பொருட்டு, இவ்விரண்டு கட்டிடங்களுக்கும் இடையில் வெற்றிடம் பரக்க அமைந்த ஒரு விசாலமான தனித்த தோட்டத்திலே நம் விடுதியை அமைக்க வேண்டியதாக இருக்கின்றது. இவ்விதமாக அமைக்கால்தான் குளிப்பதற்குப் போதுமான சௌகரியங்கள் உண்டாவதோடு, மாணாக்கர்கள் உலாவுவதற்கும், விளையாடுவதற்கும், தேகாப்பியாசம் செய்துகொண்டு நல்ல ஆரோக்கியமான சூழலிடையே வசிப்பதற்கும் இயலும்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

## ஆராய்ச்சிப் பகுதி

### தொடர்மொழி விளக்கம்.

அமிழ்தினுமினிய நந் தாய்மொழியாகிய தமிழ்ப்பாஷையில், ஓரெழுத்தொருமொழி, தனிமொழி, தொடர்மொழியென மொழிகள் மூவகையாக விளங்குகின்றன. அவற்றில் ஈண்டு யாம் வரைய நேர்ந்த விடயம் மூன்றாவதான "தொடர்மொழி" என்பதைக் குறித்தேயாம். தொடர்மொழி என்றால் ஆங்கிலத்தில் (Phrase) ப்ரேஸ் என்று பெயர். தமிழில் தொடர்மொழி என்பதற்குப் புணர்மொழி, அதாவது ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் அல்லது பதங்களாலிணைக்கப்பட்டதோர் தொடர் என்று பெயர். விளக்கம்=தெளிவு அல்லது விசாரணை, பிரகாசம் என்பது பொருள். விளக்கு என்னும் வினைச்சொல் தொழிற் பெயர் விகுதியாகிய அம் சேர்ந்து விளக்கம் என்றாயிற்று. எனவே, "தொடர்மொழி விளக்கம்" என்பதற்கு 'ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளாலாகிய சொற்றொடரின் பொருளை விசாரணைசெய்தல், தெளிவுபடுத்தல், அதாவது பிரகாசிக்கச் செய்தல்' என்பதே திரண்டபொருள். ஆங்கிலத்தில்(Idioms & Phrases) இடியம்ஸ் அண்ட் ப்ரேஸஸ், அதாவது 'பாஷைப்போக்கும் தொடர்மொழிகளும்' என்பதை விளக்கத் தனித்தனி அத்தியாயங்கள் ஆங்கில-இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளன. அதனால் ஆங்கிலங் கற்போருக்குப் பழம் பாஷையின் போக்குகள் எளிதாய் அறிந்துகொள்ளக் கிடக்கின்றன. நந் தமிழ் மொழியிலோ பண்டைத்தமிழ்ப் போக்கையும் தொடர்மொழிகளினுட் கருத்தையும் செவ்வனே எளிதிலறிந்துகொள்ளத் தமிழிலக்கண நூல்களொன்றேனுங் கூறுகொழிந்தன. இது நந்தமிழர்களுக்கோர் பெருங் குறையாயுள்ள தென்பது கூறாமலே விளங்கும். ஆனால் நந் தெய்வத் தமிழிலோ அத்தகைய மொழிகள் அளவிறந்துள்ளன வென்பது அறிஞர்கள் பலருமறிந்ததே. ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேடனாலும் அளப்பரிதாயுள்ளனவென்றால் அதன் பெருமையை யாவரே கூற முற்றுணிவார்கள்? எவருமிலர். எனினும், தமிழின் மாட்டுள அன்பின் பெருக்கால், சிறுபெண் மணல்வீடு கட்டுவதை யொக்க, என் சிற்றறிவிற் கெட்டிய வண்ணம், கடலையொப்ப விரிந்து கிடக்கும் தமிழ்த்



தொடர்மொழிகளில் மிகச் சிலவற்றை ஈண்டெடுத் தாராய்வாம்.

I. திரிசங்கு சுவர்க்கம் :—இது தமிழரிடை வழங்கும் ஒரு தொடர்மொழி. இது சூரிய குலத் தோன்றலாகிய திரிசங்கின் பொருட்டு விசுவாமித்திரரால் உண்டாக்கப்பட்ட புண்ணிய வுலகம் எனப் பேர்பெறும். நம்மிந்திய சகோதரர்கள் பிறர் உன்னால் முடியாதெனத் தடுக்கவும் கேளாமல் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்வான். ஆரம்பித்து ஈற்றில அதனை முடிக்கும் ஆற்ற லிலனாகி விழிக்குந்தருவாயில் அவனை நோக்கி, "ஏதப்பா, நீ எடுத்த காரியம் திரிசங்கு சுவர்க்கமாய் முடிந்தாற்போலிருக்கிறது" என இத்தொடர்மொழியைப் பிரயோகம் செய்து ஏளனம் புரியாநிற்பர். ஆனால், இதன் பொருளாழத்தையும் இது சம்பந்தமான சரித்திரத்தையும் ஊன்றிப் பார்த்தறிந்தோர் மிகச் சிலரே. ஆதலி னிதனைக் கூறுதும். சூரிய வம்சத்துதித்த சூரிய வணலான் என்னும் அரசன்வழித் தோன்றலாகிய சத்தியாதனன் என்னுமிவனைக் குறிநெறி பிறந்தமை, நீச்சத்துவமடைந்தமை, பெண்ணுருவேற்றமை என முக்குற்றமு மேற்றமையால் "திரிசங்கு" எனக் கூறுவர். இவன் உவரிசூழ்ந்த இந்நிலவுலகைத் தன் புயவலியால் ஒரு குடை நிழலில் அரசாண்டு வந்தான். இவன் மனைவியின் பெயர் சத்தியவதி. நெடுநாளிவர்க்குப் புத்திரபேறின்மையால், தங்குல குருவாகிய வசிட்டமுனிவர் சொற்படி, அயத்தியாம்போரத்த நித்தனை நோக்கி நெடுநாள தவங்கிடந்து, அவன் றன் திருவருளாலிப்பூவுலகில வாய்மை நிறுத்திய அரிச்சந்திரப்புதல்வனை ஈன்றனர். பின்னர்த் திரிசங்கு தன் குலகுருவாகிய வசிட்டரையடுத்துத் தான் உடலோடு சுவர்க்கம் புக ஒரு யாகம் செய்தருள வேண்டுமென் றிரந்தான். முனிவர் கூடாதென மறுக்க அவர் புத்திரரிடஞ்சென்று வேண்ட, அவர்களும மறுப்பாராயினர். அரசன் சினமுற்றுப் பிற முனிவரிடஞ் சென்று தான் நினைத்தது முடிப்பனென அகன்றனன். இதனை யோர்ந்த வசிட்ட முனிவர், 'குருநெறி பிறழ்ந்தமையால் நீசனாகக்கடவாய்' எனக் கோலவச் சபித்தனர். அதனாற புலையுருவேற்று வசிட்டருக்குப் பகைவா யாமரன வேர்ந்து, காதிமைந்தனாகிய விசுவாமித்திரனை யடைந்து நிகழ்ச்சியோதி வழிபடப் பணிந்தனன். அம்முனிவர் திரிசங்கு சொன்னதைக் கேட்டுக் கடுஞ்சினமடைந்து அவனுக்கு அபயமளித்து, மற்றைய முனிவர்களை யாகஞ் செய்ய அழைத்தனர். அவர்களை வசிட்ட முனிவரின் புத்திரர்கள் தடுத்தார்கள். காதிமைந்தன் அவர்களைக் கடிந்து கொன்று, தாமே யாகத்தைச் செய்யத் துணிந் தவிசொரிய, தேவர்கள் யாவரும் அவ்வவி யேற்காதொழிந்தனர். அதனாற் கோபமூண்ட முனிவர், திரிசங்குவை நெய்யிறைக் குஞ் சுருவையினேற்றிச் 'சுவர்க்கம் போ'வெனப் போனான் அதுகண்ட தேவர்கள் திரிசங்குவை "நீசனே, இவ்விடம் வாராதொழிக" எனத் தலைகிழாகத் தள்ளினார்கள். உடனே அரசன் முனிவரை நோக்கி யோலமிட்டனன். அவரும் தம்தவமகிமையால் அரசனை அவ்வந்தரத்திற்றானே வீழாது நிற்கச்செய்து, வேறோர் சுவர்க்கத்தைச் செய்வான் கருதி, நட்சத்திரங்கள், தேவகணங்கள், சராசரங்கள் முதலிய சிலவற்றைப் படைத்தனர். பொன்னுலகோரும் புரந்தரனும் முனிவர் புது சுவர்க்கம் படைத்ததற்கு வெருவி, காதிமைந்தனை யடைந்து, 'ஐயனே! இனிப் படைத்தலை யொழிக. இப்போது படைக்கப்பட்டவைகளும், திரிசங்குவும், நட்சத்திர மண்டலத்தி னருகிலிருக்கட்டு' மென வேண்டினர். முனிவரும் அரசனுக்கு 'அங்ஙன மெந்நாளு மிருக்க' வென வரம்பாலித்தனர். அதுவே 'திரிசங்கு சுவர்க்கம்' எனப் பெயர்பெறும். அக்காலந்தொட்டே இத் தொடர்மொழி நந் தாய் நாட்டில் வழங்கி வரலாயிற்றென்ப.

II. சமயகோடரி :—இது எதிர்மறையணியின்பாற் பட்டு, 'தருணத்துக்கு உதவாத கோடரி' (கோடாலி—மரம் தறிக்கும் கருவி) என்று பேர்பெறும். இதனை நந்தமிழ் நாட்டார், ஒருவன் அவசியம் நேர்ந்துழி தருணத்தில் உதவாமற் போவதைக் குறித்து, அவனை நோக்கி, "நீ சமயகோடாலி யல்லவா?" எனச் சீற்றத்துடன் சொல்கின்றனர். ஆனா லித்தகைய சந்தர்ப்பத்தில் பிரயோகிக்கின்ற வித் தொடர்மொழியின் ஆழ்ந்த கருத்தையும், எக்காலத்தில் யாது காரணத்தை முன்னிட்டு இத்தொடர் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டது எனபதையும் ஆராய்ந் தறிந்தனரில்லை. ஆகவே கேள்வி வாயிலா யறிந்த வோர் சரித்திரத்தைக் கொண்டு மேலே வரையப்பெற்ற தொடர்மொழியை ஆராய்வாம்.

எந்நாட்டிலும் நன்னாடாய், பொன்னாட்டினு மிக்கதாய் விளங்குஞ் சோழநாட்டிலே, திருவாரூரென்னுந் திவ்விய தலத்திலே, குருலிங்க சங்கம பக்தியிற் சிறந்த "கண்டகோடாலிப் புத்தர்"

என்னுஞ் சிவநேசச்செல்வரா மன்பரொருவ ரிருந்தனர். இவர் ஆசாரகிருத்திய வைதிகநெறி யினராய்,நிததம் ஸ்நானபானுதி நித்திய கருமா னுஷ்டானங்கள் முடித்து, சுசீலராய், ஸ்ரீ வன்மீ கப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோ யிற் றிருவாயிலடைந்து,ஆசாரஹீனராய் (அசு சத்துடன்) ஆலயத்துட் செல்லும் அறிவிலோ ரைத் தடுத்து, சுசீலரா யுட்செல்லுமா றய்த் துத் தடுத்துங் கேளாமல் அசுசாரத்துடன் செ ல்ல எத்தனிப்போரைத் தன் கைக்கோடரியால் கண்டிக்கும் விரதம் பூண் டொழுகுவாராயினர். ஆலயத்துட் செல்லு மன்பர்கள் பலரும் இவர் சிவபக்தி நெறிக்குப் பயந்து ஆசாரவொழுக்க முடையோராய்ச் சுவாமி தரிசனத்திற்குச் செல்வராயினர்.*

இவ்வனம் நிகழும் நாளில், ஸ்ரீ பரமபதியா கிய சிவபெருமான்,கண்டகோடாலிப் பத்தரின் உண்மைநெறி விசேடத்தை உலகினர்க் குணர்த் துவான் வேண்டி, நாவலூர் நம்பியாகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளின் சொப்பனத்திற் றோ ன்றி, 'நீயும் நின் இன்ப மனைவியாம் பரவையும், காலை துயிலெழுந்தவுடன் ஒரு கணநேரமுந் தாமதிக்காமல் நமது திருக்கோயிலடையக் கடவீர்" என்று திருவாய் மலர்ந்து திருவுருக் கரந்தனர். நம்பியாரூரென்னும் வன்றொண்டரும் கண்டகோடரிப்பத்தரின் நெறிக்குப் பயந்தனரா யினும், இறைவனாணை மறுத்தற்கஞ்சி, விடியற் காலை துயினீத்த க்ஷணமே ஸ்நானுதி கர்மா னுஷ்டானங்களைச் செய்வதற்கும் தாமதிக் காமல் பரவையாருடன் திருக்கோயிற் றிரு வாயி லடைந்தனர். இவ் வநீதச் செ யலைக் கண்ட நம் பத்தர், கொண்டு வெஞ் சீற்றம், "தண்டனைபுரிவன் தொண்டரோ நீவிர்? மிண்டரே யகல்மின்" என்று தடுத்தனர். தடுத் துங் கேளாமல் தம்பிரான்றோழனுந் தையலுஞ் சினகரத்துட் புகுவாராயினர். ஆங்கது கண்டு, தாங்கொணுக் கோபமோங்கி, நம் பத்தர், 'உங் கிவ ருயிரை வாங்குவ'னென்று ஓங்கிக் கைக் கோடரியுடன்சென் மறுடினர். தேவியும் தொண் டரும்,திடுக்கிட் டாங்கே ஆவிலையைக்காக்க அரன் பாலோடிச் சினகரம்புகுத, திறந்தது கதவே யாக உட்சென்று கதவைத் தாளிட்டனர். ஆக வே,நம் அன்பர் தாம எண்ணியவாறு அசுசத்து டன் உட்செல்லுமவரைத் தண்டிப்பதினின்றுங் காப்பாற்றினமையின் இறைவன்பாற கோபமு ற்று, 'நம விரதபங்கஞ் செய்து நாவலூர் நம்பி யின் ஆசாரஹீனம் பொறுத்தனரே. இது நமபி சற் கடுக்குமோ'வென்று பலவாறெண்ணி மனம் வேறுபட்டு, 'நாமிதுகாறும் இவர் பாலிழைத்த பக்தியும் கொண்ட விரதமும விழலுக்கிறைத்த நீரெனவாயிற்றே' என்று நொந்து, திருவாரூ ரெல்லைவிட்டகன்று,ஆங்குள்ள ஒரு குக்கிராமம் புக்குத் திருமடம் கண்டு, வருமடியார்க்குத் திரு வமுதளிக்குஞ் செயலை மேற்கொண்டு, அறம் பல விழைந்து நற்பட விருந்தனர். தவிர, திருவாரூர் வன்மீகப்பெருமானை மீதுற்ற சிறறங் காரணமாக, திருவாரூர் என்று சொலலைக் கொண்டு தப்பித்தல வரும் எவரையும தன் கைக்கோடரியால் தண்டிக்கும் விரதமேற் கொண்டு, அடியார் பக்தி சிவபக்தி தவறு நெறி யினராய் வதிவாராயினர். இவர் நெறி யெங் கும் பரவலாயிற்று. ஈதறிந்த சிவனடியார் பலர் ஆங்குச் சென்றுழி தாந் திருவாரூரில் வசிப்பவ ராயினும் வேறூரைதையனும புகன்று அமு துருந்தச் செலவராயினர்.

இப்பால் சின்னுட் சென்று பார்வதி பாகரா கிய சிவபெருமான,மீண்டு மிவரைச் சோதிப்பா னெண்ணித தாமே யொரு சிவனடியார் வேடங் கொண்டு திருமட மடைந்தனர். கண்டகோ டாலிபத்தர் ஒரு காரியார்த்தமாய் வெளிச் சென்றிருந்தமையின், அவர் தங் காதலியார் அடியரை வணங்கி, அர்க்கிய பாத்ய ஆசமனம் முதலிய அளித்து, "சுவாமிகாள! தாமிருப்ப தெவ்வூ" ரென்றுசான்னர். கள்ள வேடங் கொண்ட கடவுளாமடியார், "அம்மே, யாமிருப் பது செல்வத் திருவாரூ' ரென்று செப்பினர். தேவியார் ஏக்கங்கொண்டு அடியாரைவணங்கி, 'இடுகாட்டிலாடு மீசருக்குப! என பாத்தர் திரு வாரூர் வன்மீகப்பெருமானைம் கொண்ட கோ பங் காரணமாக, திருவாரூர் என்று சொல்லிக் கொண் டிவணடைந்தோரைத் தன் கைக் கோ டரியால் கண்டிக்கும் நியமம் பூண்டுளாராதலின்,

---

*இவரே விறன்மிண்ட நாயனுரென்றும்,இத்தகைய அரிய விரதத்தை அவர் மேற் கொண்டிருந்தாரென் ன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அசுசத்துடன் ஆலயம் சென்ற காரணத்தைக்கொண்டு இறைவ னையும் நம்பியையும் புறம்புலவத் தொதிகனென்ரென்றும், தன் கைக்கோடரியாற் கண்டிக்கவும் முயன் ரு ரென்றும், நம்பி ஓடி ஆலயத்துள் ஒளித்தனரென் றும், இறைவனவர்பா லீபெட்டிருந்தமையான் திரு வாரூரை விட்டகன்றன ரிவரென்றுங் கூறுவர். பெரிய புராணம் முதலிய நூல்களில் இவைகள் காணப்படாமையின் விடுத்துக் கண்ட கோடலிப்பத் தரென்னும் பெயரானே எடுத்துக்கொண்ட சரித் திரத்தை முடிப்போம்.

# அன்பர்களுக்கு அறிக்கை

இரண்டாம் ஆண்டு தொடங்கி எட்டு மாதங்களாகியும் நமது மித்திரனுக்குச் சந்தா அனுப்பாத நண்பர்கள் இன்னும் பலர் உளர். உலகத்தில் நடைபெறும் ஏனைய பத்திரிகைகளில் எவையும் நமது மித்திரனைப்போன்று முன்பணம் பெறாமல் எட்டுமாதகாலம் அனுப்பப் பெறுவதில்லை என்பதைச் செந்தமிழ்க் குலாபிமானிகளாகிய நமது சந்தா நேயர்கள் ஒரு கணநேரமும் சிந்திப்பார்களாயின், இவ்வாறு நமது சந்தாத் தொகையைச் செலுத்தாது இன்னும் பாக்கி வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். பெரும்பாலும் சந்தா பணத்தைக்கொண்டே ஒரு பத்திரிகையை நடத்த வேண்டியதிருக்கிறது. இக்காரணத்தைக்கொண்டே சந்தா தொகையை முன்னதாக வி. பி. தபாலில் வாங்கிக்கொண்டு பத்திரிகையை யனுப்புவது எங்கும் வழக்கமாக இருக்கிறது. நமது மித்திரனின் சந்தா நேயர்களுக்கு வி. பி.யில் பத்திரிகையை அனுப்பிச் சந்தா வாங்குவதால் அநாவசியமாக ஐந்தணா அதிக செலவாகுமே என நினைத்து, அவர்களுக்கு அவ்வதிக செலவை வைப்பது தகுதியல்லவெனவும், குலாபிமானிகள் எப்படியும் பணம் கேட்காமலே அனுப்புவார்கள் என்னும் நம்பிக்கை கொண்டும், இதுவரைக்கும் முன்பணம் பெறாமலே அனுப்பிவந்தோம். ஆயினும், ஒரு வருஷத்தில் எட்டுமாத காலங்களாயும் இன்னும் சந்தாசெலுத்தாத நேயர்கள் பலரிருப்பதனால் அவர்களிடமிருந்து இப்பொழுது பணத்தை வசூலிப்பது எமது அவசியமான கடமையாக இருக்கின்றது. ஆகவே செப்டம்பர் மாதம் 20 தேதிக்குள்ளாகச் சந்தா தொகையைச் செலுத்தாத அன்பர்களுக்கு புரட்டாசி மாதத்து மித்திரன் ரூ. 1—11—0-க்கு வி. பி. யில் அனுப்பத் தீர்மானித்திருக்கிறோம். அன்பர்கள் மறுக்காமல் வி. பி.யைப் பெற்றுக்கொண்டு நமது மித்திரனை ஆதரிக்க வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

சென்னை<br>
1—9—28.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.எ. எல்.டி.,<br>
செந்தமிழ்மித்திரன் பத்திராசிரியர்.

அங்ஙனஞ் சொல்லுதலொழித்து வேறொரதை யேனும் புகலமின்' என்று வேண்டினர் அதற்கவர் மறுக்க, அம்மையார் 'வேறுசூழ்ச்சி யதே னுமொன்றால் இதனைத் தடுப்ப' னென்றெண்ணி, அடியரை ஸ்நானத்துக்குச் செலவிடுத்துத் தாம் அறுசுவை யுண்டி யமைத்தற்கு அட்டில் புகுந்து கடிதிலமைத்தனர்.

வெளிச்சென்றிருந்த கண்டகோடரிப்பத்தரும் மீண்டும் மடமடையத் தேவியால் சிவனடியாரொருவர் வந்ததோர்ந்து தங்கியம புடித்துச் சிவனடியார் வருகையை எதிர்பார்த்திருந்தனர். கள்ள வேடங்கொண்ட கடவுளும் வந்தனர். அர்க்கியபாத்யாதி ஆசமனீயங்களா லுபசரித்து வணங்கி, ஆசனத்தமர்த்தி, அடிசில் படைப்பாராயினர். பத்தரும் பரமன்பக்கல் பரிகலத்தமர்வாராயினர். நாயகன் குணமோர்ந்த நங்கையும், சிவனடியார்க் கிடையூறு நேரா வண்ணம், வழக்கப்படி வலது கைப்பக்கம் வைக்குங் கோடரியை மாற்றி இடப்பக்கம வைத்து அர்க்கிய நீர் வழங்குவாராயினர்.

வழக்கப்படி நம் கண்டகோடரிப்பத்தரும் அடியரை நோக்கிச் "சுவாமிகாவெங்குதலூர்" என்றனர். கள்ள வேடங்கொண்ட கடவுளோ "அடியேன் செல்வததிருவாரூர்" என்றனர் அதனுற சினங்கொண்ட பத்தரும் 'செல்வத் திருவாரூரா'மென்று சிரமறுசெத்து மீறின கோபத்தால வலப்பக்கம் கோடரியை நாடினர். அஃதாங்கின்மையின் திகைத்து மீண்டும் இடப்பக்கம் நோக்குவதற்குள், இறைவனுங்கள்வர் ஓட்டமெடுத்தனர். பத்தர் 'ஐயமோ! சமய கோடரியாயிற்றே'யென இடப்பக்கம் வைத்திருந்த கோடரியை எடுத்துக்கொண்டு அவரைவெட்டுவான் துரத்திச்சென்றனர். அவரோட யிவரோட நம் பத்தர் தம் மெல்லையிலொரு காலுந் திருவாரூரெல்லையி லொரு காலுமாக நின்றனர். அஃதுணர்ந்த வன்மீகப் பெருமானுங் கள்வன், "அடே யோக்கியா, என் எல்லையிற காலை வைத்த நின்னை என் செய்வது?" என்று கோபத்தோடுங் கேட்டனர். உடனே கண்டகோடரிபபத்தர் திருவாரூரெல்லையிலூன்றிய தன் னொருகாலைத் தன் கைக்கோடரியாலே தறித்துக்கொண்டனர். உடனே அடியார்க்கெளியராஞ் சிவபெருமான், பர்வதராஜ புத்திரியாகிய உமாதேவியார், வாமபாகத்தில் விளங்க, ரிஷப வாகனரூடராய்க் காட்சிதந்து, கண்டகோடரிப்பத்தரை நோக்கி, "அன்ப! யாமே நும்பக்தியை இந்நிலவுலகத்தாரறியும் பொருட்டுச் சுந்தரனைப் பரவையோடுங் கோயிலில அருசத்துடன் வருமா றேவினம். நீ நின் விரதந்தவறி தவறுபல அன்னாரை வெட்டத்துணிந்தமையின், அவரையுங் காத்தேயாக. இப்போதும நின் விரதம்பாழி தவறுமல காலையும் வெட்டிக கொப்புறுதனையன்றோ? நின்போல பக்தி புரிந்தோர் நிலவுலகத் தெவருமிலர். நீயும் நின மனைவியும சுவர்க்கலோகத்தில வாழுகின்ற தேவர்களுக்கு மெட்டாத நந் திருவடி நிழலாம முத்திப்பேறுடை யடையக்கடவீர்களாக' வென்று திருவாய் மலர்ந்தருளினர். மேற்கண்ட திருவிளையாடல் நிகழ்ந்த காலமுதொட்டே இத்தொடர்மொழி நந் தாய் நாட்டில் வழங்கிவரலாயிற்றென்ப.

(தொடரும்).

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த சமரச ஞான சமாஜம்.
காஞ்சிபுரம்.

## பொது விஷயங்கள்

### பொருட் சிறப்பு.

இப்பூவுலகின் கண்ணே புன்புலால் கொண்ட பல்வேறு பிறப்புக்களில் மானிடப் பிறப்பே உயரியது என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததோ ருண்மையாமென்க. என்னை?

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்"—என்று மணிவாசகப் பெருந்தகையாரும், "எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான யாதினுமரிதரிதுகாண்" என்று தாயுமானவரும், "அரியது கேட்குந் தனி நெடுவேலோய! அரிதரிது மானிடராதலரிது" என்று ஒளவைப் பிராட்டியாருங் கூறியிருக்கின்றார்களாகலின், ஏனைய மிருகம் பறவை நீர்வாழ்வன முதலியவற்றிற்கும் மனிதனுக்கும் பேதமென்னை யெனின், முக்கியமாய இன்னுயிர்த் துக் காணக்கிடப்பது பகுத்தறிவென்னு மியல்

பெருஞ்செல்வம் வாய்ந்ததொன்றே யென்க. இத்தகைய உயரிய பகுத்தறிவினைக் கொண்ட மக்கட் பிறப்பினர் செய்தல்வேண்டுவதான புருஷார்த்தங்கள் நான்கென ஆன்றோர் வரையறுத்திருக்கின்றனர். அவையே அறம்பொருள் இன்பம் வீடு என மொழியப்படுவன. இவற்றைத் தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என வடநூலார் கூறுவர். இந்நான்கனுள் முன்னின்ற அறத்தைச் செய்தற்கும், பின்னின்ற இன்பந் துய்த்தற்கும் வீடெய்தற்கும் ஆதாரமாய் நின்று கூட்டுவிக்குஞ் சிறப்பினை வாய்க்கப்பெற்றதான "பொருட் சிறப்பே" ஈண்டு நாம் ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொண்ட விடயம்.

"சிறியோர் மதிக்கு மிந்தச் செல்வம்" என்று பேரறிஞர்களால் வெறுக்கப்பட்டிருப்பினும், 'வெறுக்கை' யென்றே ஆன்றோர்களால் பேர் விதிக்கப்பெற்றிருப்பினும், பலபந்தங்களையுண்டாக்கி, தெய்வ சிந்தனையகற்றி, பழிபாவங்களைப் பெருக்கி, பல இன்னல்களை விளைக்குமென்று சிலரால் கூறப்பட்டிருப்பினும், இவையெல்லாம் வாசாகயிங்கர்யமேயன்றி வேறல்ல. உண்மையில் பொருளின்றி எதுவுஞ் செய்யவியலாது. இம்மை மறுமை சுகங்களை யடைவதற்கும் பொருளே காரணமென்று கூறுவது மிகையாகாது.

இன்பப்பொருளாவது இம்மை மறுமை இரண்டையுந் தருவதுமன்றி அச்சாணியாகவுள்ள பெருஞ்செல்வம். அச்செல்வத்தனுமினைந்கழ்வது இவ்வுலக வின்பமும் அவ்வுலக இன்பமாகிய பரமார்த்தக இன்பமுமாமென்க.

"அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு" என்னுந் திருக்குறள் வாக்கியமே இதனை நன்கு வலியுறுத்தும். "பொருளுள்ளோர்க்குப் பூலோகம் அருளுள்ளோர்க்கு அந்த லோகம்" என்பது உலகவழக்கு. செல்வமில்லையேனின் ஒருவன் இவ்வுலகினைக் கணப்போதாயினும் செய்ய வியலாது. ஆகலின் உலகவாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாததென்று பெரியோர் விளக்கியருளினார்கள். அறநெறியும் பொருளில்லையாயினால் தரும விருத்தியும் எய்தாவாம்; இன்பங்கிட்டுதலும் அருமையாமென்க. அறத்திற்கும் இன்பத்திற்கும் பொருளே காரணம். அப்பொருளைக் கொண்டு செய்யும் அறமே இம்மையுமறுமைப் பயன்களை யளிக்கக்கூடியது.

"அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு" என்றாரன்னன் அறஞ்செய்ய முற்படுவோரும் உலக வின்பம் விழைகுநரும் அத்தகைய செல்வத்தினை யுடையவராதல் மிக்க அவசியம். தவிர,

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" என்று கூறியிருத்தலினால், பொருளானது எழுத்து வாசனை யறியாத நிர்மூடனையுங்கூட உலகத்தார் நன்குமதிக்கவும், அவன் வார்த்தைக் கடங்கி எல்லோரும் அவன் ஏவற்பணி புரிந்து நடக்கவும்

"கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்" என்றபடி கற்றோரும் மற்றோருங் காதலித்துப் பற்றவுஞ் செய்யுமன்றி, அப்பொருளின் சிறப்பும், அது இருக்கவேண்டியதின் அவசியமும், அதனை ஈட்டலின் முக்கியமும் அளவுபடுத்துக் கூறற்கியலா. அப்பொருளில்லா வழி

"...................................இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லாதவன் வாயிற்சொல்" என்றபடி பத்து மாதஞ் சுமந்து மிக்க அருமையோடு பெற்ற தாயும் விரும்பாள்; நம் சுகதுக்கத்துக்கு ஒற்றுமைப்பட்ட மனைவியுங்கூட விரும்பமாட்டாள்; உலகமுமவனை மதியாது; அவன் சொலலுமேறாமென்னின், பொருளின்மையின் கஷ்டம் யாதென உரைக்கக்கூடும்! "இல்லாதவனொரு பொல்லாதவனே" "ஏழைவார்த்தை அம்பலமேறுமா?" "ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்", "பணம் பந்தியிலே குலம் குப்பையிலே" என்னும் உலக வசனத்துக்குமேற்ப

"இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு" என்று நாயனாருங் கூறியிருத்தல் காண்க. ஆதலால் யாவரும் செல்வத்தை விடாமுயற்சியோடு வருந்தித் தேடுதல் வேண்டும்.

"வென்றியாக்கலும் மேதகவாக்கலும்
குன்றினோரைக் குணமுனவாக்கலும்
அன்றியுங் கல்வியோ டழகாக்கலும்
பொன்றஞ் சாகரத்தாய பொருள் செய்யுமே"

என்றும்

"பொருளுள்ள பேர்களுக் கருளுண்டு புகழுண்டு
புண்ணியஞ் மிக்கவுண்டு
பூதலத்தவரெலாங் கண்டவுடனே தொழுது,
புகழ் குபேரனென்பர்.



இருகொன்றிலாத மதிபண்டு திறலுண்டு மெய்த்
தேசிகர்களருளுண்டு
தீங்கியற்றினுமன்னை யென்பார்கள் பெருமையும்
சீரொடு வீரமுண்டாம்
அருளுண்டு பக்தருள வனவுண்டு நண்ணினோர்க
ளாதரிப்போர்களுண்டு கீர்த்தியும்
அவர்முகத் தெளிவுண்டு களையுண்டு கல்
லாதர்க் கேர்த்தியுண்டு" என்றும் ஆன்றோர்கள் கூறியிருக்கின்றார்களாயின், பொருளிருத்தலின் அவசியம் இத்தன்மைத்தென நன்கு புலனாகின்றதன்றோ?

கல்வி கேள்விகளில் மிகச் சிறந்தவனாய்ச் சகல சாஸ்திர பாண்டித்திய முடையவனாயிருந்தாலும் கைப்பொருளொன்றிலனாயின் இப்பெருவுலகம் வசைமே செய்யும். தவிர, அவனுடைய சக்தியும் புத்தியும் உப்பு வேண்டும் புளி வேண்டும் அரிசி வேண்டும் ஆடை வேண்டும் என்கிற சிந்தனை நெருப்புக் கிரையாகின்றன. அவன் அறிவிழந்து தைரியங்குன்றி வலி குறைந்து சிறப்பற்றோனாகின்றான். இதனை,

"கோதறு கல்விசாலர் குடியிருந் தரியரேனும்
ஓதறு செல்வமிக்கோ னொருவனே சிறந்தோனென்
றாதலின் வேதமுன்னூல் கலைகளுற் றுணர்ந்தானேனும்
தீதனை மிடியனாயிற் சிறந்திடான் சிறிதுந்தானே."

என்று குசேலோபாக்கியானம் கூறுதல் காண்க. எனவே "பணமில்லாதவன் பிணம், பண்டமில்லாதவன் முண்டம்" என்பார் கூற்றுக்கிணங்க, பாசமற்ற பரதேசியானாலும் கூட "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்றும், "பணம் என்ன செய்யும்? பத்தும் செய்யும்", "பணமுண்டானால் மணமுண்டு" என்பது லோகவசனமாதலின் பொருளைப் பழிபாவங்களுக்கஞ்சி நன்மார்க்கத்தில் எத்தகைய சிரமமெடுத்தாயினும் ஈட்டல் வேண்டும்.

"திரைகடலோடியுந் திரவியந்தேடு"

என்னும் தமிழ் மூதாட்டியின் வாக்குவிசேஷம் நோக்கத்தக்கது.

"பணந்தானே யறிவாகும் பணந்தானே
வித்தையுமாம் பரிந்து கேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லாதவர்
பிணமாம் பான்மை சேர்வார்
பணந்தானே பேசுவிக்கும் தண்டலை
நீணெறியாரே பாரின் மீது
பணந்தானே பந்திபுறங் குலந்தானே
குப்பையிலே படுக்குந்தானே"

என்று மேலோர் வாக்கு காணப்படுதலின் எப்பாடுபட்டாயினும் பொருளைச் சம்பாதித்தல் வேண்டும். பொருள்தேட விரும்புவோர் சோம்பல், துயில், அச்சம், சினம், மறதி, சுறுசுறுப்பின்மையாகிய வைகளை யறவே விட்டொழித்தல் வேண்டும். பாடில்லாமற் பணமில்லை. பட்டாற் பலனுண்டு. என்பதன்றி,

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் வாக்கியத்தைக் கடைப்பிடித்து இடையறா நன்முயற்சியோடு பொருளை வருந்தித் தேட முயற்சித்தல் வேண்டும். இத்தகைய முயற்சியினரையே செல்வமென்னும் மங்கை சென்றடைவளன்றோ?

"தெய்வத்தா லாகா தெனினும் முயற்சி தன்
மெய்வருந்தக் கூலிதரும்"
"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" என்ற செந்நாப்போதாரின் திருவாக்குண்மை காண்மின்.

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொருளெஞ்
ஞான்றும்"

என்றபடி நல்வழியில் பொருளைச் சேகரித்தல் வேண்டும். ஏனெனில் குற்றமில்லாத நல்வழியில் ஈட்டிய பொருளே மேலாம் தருமத்தையும் இன்பத்தையும் தருவதாகும்

"அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" என்று நாயனார் விளக்கியிருக்கின்றாராகலின் தருமநெறியிலே பொருளீட்டல் வேண்டும். களவு, பொய்ச்சான்றுரைத்தல், பொய் வழக்கு பொய்ப் பத்திரம், விசுவாசகாதகம் முதலிய பாவ வழிகளாற் பொருள் தேடலாகாது. அது தீமையையே பயக்குமென்க. ஆகையால் நல்வழியிற் பொருள்தேடி அதனை மென்மேலும் விருத்தி செய்தல் வேண்டும். கண்டபடி மனம்போன போக்கெல்லாம் காறுமாறாய்ச் செலவுசெய்தல் கூடாது. பொருளை வருவாய்க்கேற்பச் சிக்கனமாய்ச் செலவுசெய்து மிகுத்திப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும்.

"பொருடனைப் போற்றிவாழ்" என்று கூறியிருக்கலுங்காண்க அப்படி நன்னெறியிலீட்டி விருத்திசெய்யப்பட்ட பொருளைத் தானுமனுபவித்து உத்தம பாத்திரத்திற் பிறருக்கும் வழங்கல் வேண்டும்.

"பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் — கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரேயனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்" என்றபடி தானனுபவியா

மலும் பிறருக்கும் கொடாமலும் பணத்தைப் புதைத்து வைத்தல் கூடாது.

"உண்ணா னொளிநிறா னோங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தா னென்றெண்ணப் படும்." என்று ஆன்றோர் கூறியிருக்கவின் பொருளிருந்தும் அஃதில்லா வறிஞனையும், பொருளிழந் தோனையுமொக்கும். இதற்குக் காணுண்ணாமல் மதுரம் பொருந்திய தேனைச்சேமித்துவைக்கும் தேனீக்களே சான்றாக முடியும். உண்ணாமல் தின்னாமல் வைராம்பலமானேனே என்று வருந்தும் படியும் நேரிடும் 'உண்ணாச் சொத்து மண்ணாய்ப்போகு'மென்பது உலகவழக்கு. ஆதலால் பொருளாளிகளாயுள்ளவர்கள்

"செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்னும் மூதுரையை உபதேசமாய்க் கொண்டு தங்கள் உறவின்முறை பந்துஜனங்களை ஆதரித்துக் காப்பாற்றுதல் வேண்டும். ஆனால் வரவுக்கு மீறின செலவு செய்தலாகாது வருவாயறிந்து வழங்கல் வேண்டும். ஒருவன் தான் சம்பாதிக்கும் பொருளை நான்கு பாகமாக்கித் தான் அநுபவித்தற்கிரண்டு பாகமும் தன் வயோதிக காலத்துக்கு உதவுமாறு சேமித்துவைத்தற்கு ஒரு பாகமும் நீக்கி எஞ்சிய ஒரு பாகத்தைத் தருமஞ்செய்தல் வேண்டுமென நமது பொருள் நூல்கள் விதித்திருக்கின்றன.

"வருவாயுட்கால் வழங்கல்" என்பதுவும் இதுவேயாமென்க. ஆதலின் எவனும் தன் வரவுக்கேற்பச் செலவு செய்தல் வேண்டும்.

"வளவனாயினும் அளவறிந்தழித்துண்" என்றார் ஔவையும் அளவுக்கு மீறிச் செலவு செய்தலாகாது.

"தேடாதழிக்கிற் பாடாய்முடியும்" என்றும்

"ஆன்முதலி லதிகஞ் செலவானால்
மானமழிந்து மதிகெட்டு - போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் எழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

என்றும் தமிழ்மூதாட்டியார் வருவாய்க்கதிகஞ் செலவு செய்வோனுறுங்கேட்டைமிக அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகலின் பொருளை எப்பொழுதும் அளவுக்கு மீறிச் செலவழித்தல் கூடாது. இனி பொருளை அப்படிக் கண்ணுங்கருத்துமாய்ச் செட்டாக செலவு சுருக்கிச் சேர்த்து மிகுத்தி வைப்பதினாலுறும் பயனை அதாவது பொருளிருப்பதின் பயனைச் சிறிது ஆராய்ச்சி செய்து நம் வியாசத்தை முடிப்போமாக.

"பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று."

என்று கூறியபடி பிற தேசங்களிலுங்கூட ஒருவனுக்கு நல்ல துணைவன் போலப் பகை நீக்கி உறவாக்கிப் பல நலங்களையும் உதவத்தக்கது பொருளேயாம். பணம் என்ன செய்யும் பத்துவகை செய்யும். "செல்வரைச் செய்வர் சிறப்பு" பொருளுள்ளவர்களையே உலகம் புகழ்ந்து மதிக்கும். ஆகையால்

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்"

என்று நாயனார் கூறியபடி திரவியத்தைச் சம்பாதித்துச் செல்வமுடையவனாயிருந்தாலொழிய ஒருவன் இம்மை அம்மை சுகங்களை எளிதில் அடைய முடியாது. இம்மையில் வேண்டிய தருமஞ் செய்தற்கும் புகழ் எய்தற்கும், சிவபக்தி அடியார் பக்தி முதலிய புண்ணிய வகைகளில் ஈடுபடற்கும், மற்றும் தேவாலய திருப்பணி முதலிய சிவ கைங்கரியங்களைச் செய்தற்கும் பொருளே யின்றியமையாத தாகும். பொருளே பகைவெல்லுங் கூரிய ஆயுதம்; பொருளே இம்மை சுக மனைத்திற்குங் காரணம். மறுமை சுகமென்னும் மோக்ஷத்தையுங்கூட அடைவிக்க வல்லது இப்பொருளேயாமென்க. எப்படியெனில் பொருளிருந்தால் தேவாலயப் பிரதிஷ்டை, சிவலிங்கப் பிரதிஷ்டை, நந்தவனம், குளம், தோப்பு, அன்னதானம் முதலிய மோக்ஷத்துக்குரிய சிறந்த மேலாகிய புண்ணியங்களைச் செய்ய இயலும் அதுவழி மேலாம் இறைவன் திருவருளையும் அவன் திருவடிப்பேற்றையும் மோக்ஷவின்பத்தையும் பெற்றுய்யலா மென்க.

"ஒண்பொருள் காழ்ப்பவியற் றியார்க் கெண்பொருளேனை யிரண்டு மொருங்கு" என்றபடி பொருளே மற்றைக் கருமம் இன்பம் வீடு பயக்கவல்லது; பொருளே எல்லாவற்றிற்குங் காரணமாயிருத்தல் பற்றி அத்தகைய பொருளை நல்வழியில் ஈட்டி அறம் பல செய்து எல்லாம்வல்ல இறைவன் திருவருளுக்குப் பாத்திரராவார்களென்று நம்புகிறேன். இத்தகைய உயரிய செல்வம் நம்மவர்பால் மிகுந்தோங்க முருகன் திருவருள் இனிது சுரப்பாளுக. சுபம்.

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
கண்டாச்சிபுரம்.



## ஆலய வழிபாடு.

நாம் முன் சென்மத்தில் செய்த நல்வினை காரணமாக நம் மருளையோட்டி அருளையூட்டக்கூடிய பத்திரிகைகளுள் சிறந்ததாய செங்குந்த மித்திரனில் மேற்கண்ட தலைப்பையொட்டி எழுதத் தொடங்கினேனாயினும், இதில் குற்றங்கள் மலிந்து கிடப்பினும்

குணம்நாடிக் குற்றமும்நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்னும் வேதவாக்குக் கேற்ப, நல்லோர் குணத்தையே கிரகித்துக் குற்றத்தை நிராகரிப்பார்கள் என்னும் துணிபுபற்றி இதை வரையத் துணிந்தனம்.

ஆதியந்தமற்றவராயும் நிர்க்குணராயும் சுஜாதீய விஜாதீய சுவகத பேதமற்றவராயும் மனோவாக்கிற் கெட்டாதவராயும் அதீந்திரியராயும் சர்வாந்திரியாமியாயும் பாசமற்றவராயும் பரிசுத்தராயும் ஜோதிப்பிழம்பாயும் தனக்குவமையில்லாதவராயுமுள்ள சாக்ஷாத் பரப்பிரஹ்ம சொரூபத்தை மனதை யிறக்கச்செய்து யோகமுதிர்ச்சியினால் ஞானத்தேனுண்டு வாழும் ஞானிகளே பதிஞானத்தால் அறிய மாட்டுவார்களேயம்லாது கள்ளுண்டபேய் மனக்குரங்கை யடக்கவகையறியாது பல்வழிகளிலும் ஐம்புலன்களினூடே செல்லவிட்டுத் திரியும் நம்போன்ற பேதையர்களின் காட்சிக்கு அது எளிதாகிவிடும் என்பது முடவன் கொம்புத்தேனுக்கு அவாவுற்றது போலாகும். ஆகையினால் நம் மூதாதையர்கள் பசுவின் உடம்பு முழுமையும் பாலிருப்பதை யறிந்தும் முலைக்காம்பினிடமாக எவ்விதம் பாலைக் கிரகிக்கிறார்களோ அவ்வாறே பிரமம் சர்வமயமாயிருந்தும் ஆலயத்தில் இலிங்கம் ஒன்றைப் பிரதிட்டை செய்து அதைக் கடவுள் என்று எண்ணிப் பக்திபூர்வமாக வழிபட்டுப் பிறகு பல்வழிகளிலும் செல்லும் இம்மனதை ஒரே முகமாகச் சிவலிங்கத்தினிடத்தில் தியான வழியாக அமரச்செய்து அதன் மூலமாக அந்தப் பரப்பிரம்மத்தைத் தரிசித்து முக்தி அடையவேண்டும் என்னும் நம்மீதுள்ள பெருங் கருணையினால் முதன் முதலாக ஆலயத்தையமைத்தார்கள். ஆலயம் என்பதன் குறிப்புப் பொருள் தெரிந்திருந்தால் நாம் அவ்வாலயத்தை அலக்ஷியமாகக் கொள்வோம். ஆலயம் = ஆ + லயம்; ஆ = பசு அல்லது ஆன்மா, லயம் = ஐக்கியமாகுதற் குரிய இடம்.

அதன் சூக்குமப் பொருளை யறியாத நாம் நாடக சாலைபோலவும் கண்காட்சி சாலைபோலவும் நினைத்து ஆடையாபரணாலங்கிருதர்களாய் ஆலயத்துட்புக்கு ஆங்குள்ள கண்ணுக்கினிய காட்சிகளை யெல்லாம் வேடிக்கையார்த்தமாய்ப் பார்த்துவிட்டு உயிர்க் குறுதிதரக்கூடிய ஒரு பயனையும் அறியாது வீணே இல்லமேகுகிறோம். இவ்வாறான நம் செய்கைகளைக் கண்டால் மிஸ் மேயோபோன்ற பிற மதத்தார்கள் நம்மை எள்ளி நகையாடாது வாளாவிருப்பரோ? ஆகையால் பொதுவாக இந்துக்களும் சிறப்பாகச் செங்குந்தர்களும் அறிந்துகொள்ள வேண்டுவது யாதெனில் ஆலயத்துட் சென்றவுடன் நம் குருவினிடம் பயபக்தியுடன் செல்லுமாப்போல அவர் சந்நிதானத்துட் சென்றவுடன் அவரது திருப்புகழை நாவாரவோதிக் கண்ணீர் வார மெய்ச்சிலிர்ப்ப நிஷ்காமியமாய்ப் பக்தி செயல்வேண்டும். இவற்றிற்கு நம் ஐயன் துணை புரிவாராக.

வாழ்வை நம்பி மதிகெட்டுக் கும்பியில்
வீழ்பூன் மாந்தருக்கோர் உறுதிவிளம்புவேன்
தாழ்சடைக் களவீசன் றனையஞ்
சூழ்தல் சூழிற் றுறக்கங் கிடைக்குமே.

M. சுந்தரவடிவேலு முதலியார்,
திருமயிலாப்பூர்.

# அறிவியல் பகுதி

## ஞாயிற்றின் கதிர்கள்

(தொடர்ச்சி)

### எழுவகை நிறங்கள்

முப்புறக்கண்ணாடி ஒன்றை எடுத்துச் சாளரத்தின் மூலமாக வரும் சூரிய ஒளியில் பிடிப்போமானால், தரையில் வரிசை வரிசையாக அழகான பலநிறக் கோடுகளைக் காண்போம். முப்புறக் கண்ணாடியைத் திருப்பத்திருப்ப அக்கோடுகள் நீளமாகவும், குறுகலாகவும் ஆகின்றன. ஆயினும் நிறங்களின் வரிசைகள் மாத்திரம் மாறுவதில்லை. உற்று நோக்குவோமாயின் ஒரு புறத்தில் செந்நிறமும், அதன் பக்கலில் செம்பீத நிறமும் (ஆரஞ்சுநிறம்), அடுத்தாற்போல் மஞ்சள் நிறமும், பிறகு பச்சை நிறமும், நீலநிறமும், கருநீல நிறமும், வயலெட் நிறமும் நெருக்கமாய்க் கலந்திருக்கக் காண்போம். கிளை விளக்கில் தொங்கவிட்டிருக்கும் அறுக்கப்பட்ட கண்ணாடித் துண்டின்மீது பிரகாசத்தோடு வெயில் காயும்போது மேற்கூறிய ஏழு நிறங்களையும் சுவரின்மீது சாதாரணமாய்க் காண்கிறோம். ஓர் இருண்ட அறைக்குள் ஞாயிற்றின் கதிரைச் சிறிது புகவிட்டு அதன் குறுக்கே முப்புறக்கண்ணாடியைப் பிடிப்போமாயின் இந்நிறங்கள் இன்னும் தெளிவாய்த் தெரியும்.

இவ்வேழு நிறங்களும் எங்கிருந்து வருகின்றன? கண்ணாடியிலிருந்து வருகின்றனவா? இல்லை. ஏனெனில், இவற்றை வானவில்லிலும், சோப்புக் குமிழியிலும், குளத்து நுரைகளிலும் சகசமாய்க் கண்டிருக்கிறோம். ஆகையால் வானவில்லிலுள்ள நீர்த்துளிகளிலும் குளத்திலுள்ள நுரைக் குமிழிகளிலும் தோன்றுவதுபோலவே, இவ்வழகிய நிறங்களும் கண்ணாடியின் மூலமாய்ப் போவதினால் பலவாகப் பிரிக்கப்பட்ட ஞாயிற்றின் கதிரேயாம்.

இதுவரையில் ஒரேவிதமான அலைகளினால் சூரிய கிரணங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லிக்கொண்டு வந்தோம். ஆனால் உண்மையில் ஒன்றிலொன்று மாறுபட்ட அளவுள்ள பலவித அலைகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை யாவும் ஞாயிற்றிலிருந்து ஒன்றாய் வருகின்றன. பல்வகைப்பட்ட இவ்வலைகளின் பரிமாணங்கள் அளவிடப்பட்டிருக்கின்றன. செந்நிற அலைகள் வயலெட் அலைகளைக் காட்டிலும் மிகப் பரந்தும் மந்தமாயுமிருக்கின்றன. கணக்கிட்டுப் பார்ப்போமாயின், ஒரு அங்குல அளவுள்ள இடத்தில் முப்பத்தொன்பதாயிரம் அலைகளிருக்கின்றனவென்றும், அதே அளவுள்ள இடத்தில் ஐம்பத்தேழாயிரம் வயலெட் நிற அலைகளிருக்கின்றனவென்றும் அறிவோம்.

உண்மை இவ்வாறிருக்கப் பல நிறங்களையுடைய பல அலைகளும் நமது கண்களில் தாக்கியும் பல்நிற ஒளியை நாம் காண்பதில்லை. அஃதேனெனின், முப்புறக்கண்ணாடி போன்ற கருவிகளால் கலைக்கப்பட்டபோதன்றி மற்றைச் சமயங்களில் அவையாவும் (பல்நிற ஒளிகள்) ஒன்றோடொன்று நெருங்கிக் கலந்துவருகின்றன. முறையான அளவோடு ஒன்றாய்க் கலந்தபோது பல் நிறங்களும் தத்தம் தோற்றங்களை இழந்து வெண்ணிறத்தைத்தான் தோற்றுவிக்கும்.

வட்டமான ஒரு கடிதாசி அட்டையை எடுத்து ஏழு வர்ணங்களையும், மேற்கூறிய வரிசைப்படிப் பலமுறைப் பூசிப் பார்ப்போமானால், ஒவ்வொரு நிறமும் தனித்தனியே தெளிவாய்த் தோன்றும். ஆயினும், அவ்வட்டை அதிவேகமாக வட்டமாய்ச் சுற்றப்படுமாயின் அட்டை, வெண்ணிறமாகவே தோன்றும். ஏனெனில், அட்டை சுற்றிவரும் வேகத்தினால் எல்லா வர்ணங்களும் ஒன்றாய்க் கலந்து ஏககாலத்தில் புலனாகின்றன. அதே மாதிரிதான் வெயில் நமக்கு வெண்மையாய்த் தோன்றுகிறது. ஏனெனில் பல் நிறப்பட்ட அலைகள் ஏககாலத்தில் நமது கண்களில் படுகின்றன.

சூரிய ஒளி முப்புறக் கண்ணாடி மூலமாய்ச் செல்லும்போது பல்நிற அலைகளாய்ப் பிரிக்கப்பட்டுப் பரவுகின்றது. மந்தமும் பாரமுமான செந்நிற அலைகள் பின் தங்கிச் சுவற்றில் தோன்றும் எழுநிறக் கோட்டின் அடிப்பாகத்தில் இருக்கும். அதிவேகத்தையுடைய சிறிய வயலெட் அலைகள் கோட்டின் மற்றொரு முனையாகிய மேற்பாகத்தில் தங்கும். இவ்விரண்டிற்கும் மத்தியில் ஆரஞ்சு, நீலம் முதலியவை தத்தம் பரிமாணங்களுக்குத் தகுந்தபடி இருக்கின்றன. இதனால் நிறங்கள் சூரிய அலைகளின் வேகத்தைப் பொறுத்தே உண்டாகின்றன எனப் பெறப்படுகிறது. கண்டு வேகமான அலைகள் ஒரு நிறத்தையும், மந்தமான அலைகள் வேறொரு நிறத்தையும் ஏன் உண்டாக்க வேண்டும் என்கிற ஆசங்கை சகசமாய் நிகழலாம். ஒளியானது கண்ணிற் கலந்து செய்யும் வேலைகளைப்பற்றி இன்னும் அநேக விஷயங்கள் நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிற இந்நிலையில், இத்தகைய ஐயப்பாட்டைத் தெளிவிப்பது மிகவும் கஷ்டமாகவே இருக்கும். சங்கீதத்தை எவ்வாறு காதினால் உணருகிறோமோ, அவ்வாறே வர்ணங்களையும் கண்ணினால் அறிகிறோம். காதின் உறுப்பில் காற்றலைகள் மெதுவாயும் விரைவாயும் தாக்குவதற்குத் தகுந்தபடி பலவித சுரங்கள் புலனாவதுபோலவே, நமது கண்களின் பின்புறத்திலுள்ள நரம்புகளினிடத்தில், ஆகாயத்திலுள்ள வேகத்தினால் வித்தியாசப்பட்ட சூரிய அலைகள் தாக்கி, மூளைக்குப் பலநிறப்பட்ட நிறங்களின் உணர்ச்சியை உண்டாக்குகின்றன. ஆகலின், நிறங்களின் தோற்றமானது, ஒரு விநாடிகாலத்தில் கண்களின் பின்புறத்திலுள்ள நரம்புகளின்மேல் தாக்கும் அலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும் என விளங்குகிறதல்லவா?

இனி நாம் ஞாயிற்றின் கதிர்களைப்பற்றி இதுவரையில் எவ்வளவு தெரிந்து கொண்டோமென்று பார்ப்போம். ஆகாய (ether) மென்று சொல்லப்படுகிற கட்புலனாகாப் பொருளின் மூலமாக வெகு வேகத்துடன் வரும் சிறு ஒளி அலைகளின் தொடர்ச்சியே ஞாயிற்றின் கதிர்கள் என்றும், அவற்றை எதிர்ப்படும் ஒவ்வொரு பொருளையும் இடைவிடாது தாக்கிக்கொண்டே இருக்கின்றனவென்றும், வெண்ணிறமே தோன்றுமாறு நெருங்கிக் கலந்துவருகிற பல பரிமாணங்களையுடைய பல்லாயிரக் கணக்கான அலைகள் ஞாயிற்றின் ஒரே ஒரு கிரணத்தில் அடங்கியிருக்கிறபடியால் சூரிய அலைகள் மிகச் சிறியவையாயிருந்தபோதிலும் அவை பல்வகைப்பட்ட பரிமாணங்களையுடையனவென்றும், செம்மை பசுமை முதலிய நிறங்களாகத் தனித்தனியே தோன்றுமாறு சில காரணங்களால் பிரிக்கப்படுகின்றனவென்றும் தெரிந்து கொண்டோம்.

அவை எவ்வாறு பிரிக்கப்படுகின்றன? இன்னும் சூரிய அலைகளைப் பற்றிய மற்ற இரகசியங்கள் யாவை? என்பவற்றைக் குறித்துச் சொல்லப் புகின் மிக விரியுமென்றஞ்சி இத்துடன் நிறுத்திச் சூரிய கிரணங்கள் நமக்கு எவ்வாறு உபயோகப்படுகின்றன என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

### ஞாயிற்றின் கதிர்கள் நமக்கு என்ன சாதகத்தைச் செய்கின்றன?

ஞாயிற்றின் கதிர்கள் நமக்கு இரண்டு காரியங்களைச் செய்கின்றன. அதாவது, நமக்கு வெளிச்சத்தையும், உஷ்ணத்தையும் தருகின்றன. இவ்விரண்டின் மூலமாகத்தான் நாம் எல்லாப் பொருள்களையும் பார்க்கிறோம். நாம் இருக்கும் அறை இருண்டிருக்குமாயின் அதிலுள்ள மேஜை நாற்காலி முதலியவை கண்ணிற்குப் புலப்படா. ஏனெனில், அவற்றிலிருந்து நமது கண்ணிற்கு வரக்கூடிய ஒளி அலைகள் இல்லை. கடலின் அலைகள் கரையிலுள்ள பாறைகளின்மீது மோதி அருகே செல்லும் படகுகளின்மீது திரும்பித் தாக்குவதுபோல, சாளரத்தின் மூலமாக வெளிச்சம் அறைக்குள் பிரவேசித்தவுடன், வெளிச்ச அலைகள் அறையிலுள்ள மேஜை முதலியவற்றின் மேல் தாக்கி அவற்றினின்றும் திரும்ப எழும்பி நமது கண்களில் பிரவேசித்து அவற்றின் பின் பக்கத்திலுள்ள நரம்புகளில் பட்டு, மேஜை முதலியவற்றின் உருவங்கள் மூளைக்கு அறிவிக்கப்படுகின்றன. நாம் பார்க்கிற ஒவ்வொரு பொருளும் பார்த்த மாத்திரத்திலேயே கட்புலனாகாத் தூதர்களாகிய அலைகளை நமது கண்களிடத்துச் செலுத்துகின்றன என்பதை நோக்க நமக்கு ஆச்சரியமுண்டாகிறதல்லவா?

சில பொருள்கள் தங்கள் மேல் தாக்கிய ஒளியலைகளை எதிரொளி செய்யாது ஊடுருவிச் செல்லும்படி விடுகின்றன. அத்தகையபொருள்களை நாம் பார்க்க முடியாது. உதாரணமாக ஒரு கண்ணாடியை எடுத்துக்கொள்வோம். அது ஏறக்குறைய எல்லா ஒளி அலைகளையும் எதிரொளி செய்யாது அதன் மூலமாய் ஊடுருவிச் செல்ல விடுகிறது. ஆகையினால் அக்கண்ணாடியின் இருப்பை நாம் காண முடியாது. ஏனெனில், அதன்மேற்படும் ஒளி அலைகளைத் திருப்பி நமது கண்களிடத்து அனுப்புவதில்லை.

(தொடரும்)

மா. அ. கனகசபை முதலியார்.

# விதி மதி வாதம்

விதி பெரிதா? மதி பெரிதா? என்னுந் தலைப்பின் கீழ் வெவ்வேறபிப்பிராயங்களுடன் நமது மித்திரனில் வியாசங்கள் வெளி வருகின்றன.

இம்மாதிரியான வாக்குவாதங்கள் பயக்கக் கூடிய நன்மை ஒன்றேயாகும். விதி பெரிதென்பதற்கு எங்கெங்கே மேற்கோள்களுண்டென்பதும் அவைகளின்னின்னவைகள் என்பதும், மதி பெரிதென்பதற்குஆதாரங்கள் எங்கெங்குள்ளன வென்பதும், அவைகளின்னின்னவைகளென்பதும் எல்லோருக்கும் தெரிவிப்பதேயாகும். இந்த வகையில் இருகட்சிக்காரர்களும் செய்கிற ஆராய்ச்சி பாராட்டத்தக்கதேயாகும்.

ஆனால், மேற்கோள்களோடு நின்று விடுதல் சரியன்று. இரண்டு எதிரான அபிப்பிராயங்களுக்கும் இடந்தருகின்ற முதியோர் வாக்குகளை எடுத்துக் காட்டுவதால், விஷயம் வாதிக்கப்பட்டு விளக்கப்பட்டு முடிவடைந்ததாகாது. அன்றியும், மனதத்துவங்களை யொட்டிய கேள்விகளுக்கெல்லாம், முதன் முதல் நமது சொந்த புத்தியைக்கொண்டே நன்காராய்ந்து, பின்னரே அதற்கு வேண்டிய ஆதார நூல்களைப் பரிசிலனை செய்யவேண்டும். அன்றேல் விவாதம் முடிவு பெறுதலில்லை; சந்தேகமும் தீருவதில்லை.

எனவே, இது பெரிதா, அது பெரிதாவென்னும் கேள்விகளைக் கிளப்பும்போதே, விதியென்றாலென்ன? மதியென்றாலென்ன? வென்பதை வரையறுக்காமற் போனால், எதைப்பற்றி நாம் பேச முன்வந்தோமென்பதே தோன்றாமல் நிற்க, எடுத்துக்கொண்ட விஷயத்தின் எல்லையைக் கடந்து நமது விவாதமும் முடிவில்லாததாகப் போய்க்கொண்டே யிருக்கும்.

நம் இறைவன் வாலறிவனாகவும் முழுசுதந்தரனாகவுமிருக்கின்ற காரணங்கொண்டு, பசுக்களாகிற நாம் (உயிர்கள், சீவர்கள், மனிதர்கள்) மலத்திடையே கட்டுப்பட்டவர்களாயினும் சிற்றறிவினர்களாகவும், சிறு சுதந்தரமுடையவர்களாகவும் இருக்கின்றோமென்பது, அடிப்படையானதோர் உண்மை. இதை ஆக்ஷேபிப்பதானால் ஆக்ஷேபிக்க. ஆனாலந்த ஆக்ஷேபம் வேறு கேள்வியாகிறது. அதற்கென வேறே வாதம் நிகழட்டும்.

மேற்சொன்ன அபிப்பிராயத்தை, உண்மையை, ஆதாரமாக வைத்துக்கொண்டோமானால், உயிர்களைப்பற்றி யென்ன ஏற்படுகிறது?

மனிதன், தனக்குப் புலனாகும் விஷயங்களைத் தனது சிற்றறிவால் சரியாகவோ தப்பாகவோ அறிவின் விளக்கத்திற்குத் தக்கதுபோல சிந்தித்து, நினைத்த வண்ணம் (சிறு சுதந்தரமுடையவனாகையால்) தன் ஆற்றலுள்ள வரையில் செய்கிறான். இச்செய்கையே வினையெனப்படுகிறது.

எச்செய்கையும், எந்த வினையும், வித்தாக நின்று, அதன் பலனை, அதன் விளைவைக் கொடுக்கும் என்பது இறைவனது அருள்சத்தியின் நியமமாகிறபடியால், அந்த நியமப்படி, செய்தவன் தன வினைப்பயனை அடைகிறான். இதுதான் விதி, ஊழ்.

விதி, ஊழ், வினைப்பயன், தலைவிதி, தலையெழுத்து என்பனவாகப் பல்வேறு பெயர்களால் குறிப்பிடும் இந்த ஒன்று, எங்கேயோ, நமக்கன்னியமாகவும், நமமோடு சம்பந்தமில்லாதது போலவும், நமக்கு எதிரியாக நமமைத் தாக்கிவீழ்த் தாட்டுவதற்காகப் பதுங்கி நிற்கும் பயங்கரமானதோர் பைசாசம் போன்றதென நினைத்து மனமழிகிறோமேயன்றி, நேரிட்டு அந்த விதியின் முகததை நோக்குகின்றோமில்லை அப்படி நோக்குவோமேயானால, விதி, ஊழ், வினை யென்பனவெல்லாம் நமது படைப்பே, நமது சிருட்டியே யெனத் தெரிய வரும்.

இதில், மேல் குறிப்பிட்டபடி, சிற்றறிவைக் கொண்டு தன்னாலியன்ற வரையில் மனிதன் தனக்கு வேண்டியவைகளைத் தேடிக்கொள்ளவும், வேண்டாதவைகளைத் தள்ளவும், வினைகளைச் செய்யத் தூண்டும் சத்தியே ' மதி,'' ''புத்தி,'' " முயற்சி " யெனப்படுகிறது.

இந்த மதி, புத்தி, முயற்சி, அறிவின் அமிசமாகையால, இதன் வளர்ச்சிக்கு இறுதியில்லை, அளவு கிடையாது.

செய்த வினைக்குப் பின்னும் அதன் விளைவிற்கு முன்னும் உள்ள இடையில் மதியானது வளரும், வளர்வதற்கு முடியும்.



செய்யும் வினையின் விளைவோ அளவிற்குட்பட்டது. தனதெல்லையைத் தாண்ட அதனால் முடியாது.

இவ்விதமாக நோக்கி, விதி, ஊழ், என்பதெல்லாம் அளவிற்குட்பட்டதென்றும், அந்த விதிக்கு, ஊழிற்கு, கர்த்தாவாயிருந்த மதி, அறிவு, நாளுக்கு நாள் ஏற்றமடையக் கூடியது. ஏற்றமடைந்து வருகிறது, என்றும் உணருவோமேயானல், விதி பெரிதா ? மதி பெரிதா ? என்னும் கேள்விகளுக்குச் சமாதானங்கள் சுலபமாகக் கிடைத்து விடும்.

அறிவானது சிற்றறிவாயினும் ,ஆக்கும் சத்தியுடையதானால் அதை யழிக்கும் சத்தியும் உடைத்தாயிருக்கவேண்டும். அந்த அழிக்கும் சத்தியும் இரண்டு விதமாக வெளிப்படுகிறது: ஆக்கியதைத் தானே யெடுத்தனுபவித் தழித்தல்; அல்லது ஆக்கியதற்கெதிரிடையான வினையை வகுத்து அழித்தல்என்பதாக. தான்செய்த வினையின பயனை நேரே அழிக்கும் ஆற்றலில்லாதபோது, விதி, ஊழ் என்பது தான் வலிதாக நிற்கும், அனுபவித்தாக வேண்டும். தான் செய்த வினையின் பயனைஎதிர்ததழிக்கும் ஆற்றலுண்டாயின் அப்போது மதியே விதியை வென்று நிற்கும்.

ஆகையால், மதியொன்றே வளர்ந்தெழக் கூடியது. அதன் வன்மையின் வளர்ச்சிக்குத் தக்கவாறுபோல, விதி பெரிதாயும், மதிபெரிதாயும் நிற்குமேயன்றி, எபபோதும், எல்லா நிலைகளிலும மதியே பெரிதென்றும், எக்காலத்திலும, எவ்விடங்களிலும, விதிதான் பெரிதென்றும் வாதிப்பது உண்மைக்கும் உலக நிகழச்சிகளுக்கும் விரோதமாகும்.

இக்காரணங்கள் பற்றியே மனித விகாச முறையில், மதியின் இளமையை, வன்மைக் குறைவை யெடுதது்க்காட்டும்போது, எடுத்துக் காட்டுவதற்காக விதியை உயர்த்தியும்; மதியின் வன்மையயெடுததுக் காட்ட வந்தபோது விதியைத் தாழ்த்தியும், பெரியோர் எழுதியுள்ளார்கள். அதுவன்றி, நாம் அபிப்பிராயபேதங் கொண்டு, உண்மையை விலக்கி நிற்பதற்காக வல்லவென்பதைத் தெரிந்துக்கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.

இதற்குப் பின்னும் சந்தேகம் நிகழ்ந்து கொண்டிருந்தாலும், ஒரு விஷயத்தில் மாத்திரம் நமக்கு விபரீதமிருபபது தகாது. வினை, விதி யென்பதெல்லாம் நாம் செய்தது தான். "என் தலையெழுத்து என்னைப்படி அலைக்கழிக்கின்றது" என்று சொல்லும்போது, " நான் செய்த இன்னலின் பலனைத்தான் இப்போது நான் அனுபவிக்கின்றேன் " என்னும் குற்ற ஒப்புக்கொள்ளும் மனப்பாங்கும், " தீங்கிழைத்துத் துன்புறுவது போலவே, நல்வினை செய்தால் எனக்கு இன்பங்கிடைக்கும், இதில் சந்தேகமில்லை " என்னும் நிச்சயமு மிருக்கவேண்டும்.

இதோடு, நமக்குத் தீங்குறும்போது எப்படி ஊழ், தலைவிதியென்று கூக்குரலிடுகிறோமோ, அதுபோலவே நமக்குச் சுகம்,நன்மை,இலாபம் கிடைக்கும்போது, இதுவும் நமது வினைப்பயன் என்பதாக விதியைக் கூப்பிடுகிறோமா என்பதையும் நாம் தனிமையில் நமதுள்ளத்தில் சிந்திப்போமாக.

வேலிறை திருவடி வெல்க என்றும்.

சமரச சைவன்,

---

குறிப்பு :—இக் கட்டுரையின் ஆசிரியர் மேல் நாட்டுக் கலைகளிலும் நம் நாட்டுக் கலைகளிலும் ஆழ்ந்த ஆராய்ச்சி நிறைந்து தற்போது மிகக் கண்ணியமும் அதிகாரமும் பொருந்திய ஒரு சிறந்த உத்தியோகத்திலிருக்கும் செங்குந்த திலகர். இவ்விஷயத்தில் இவர் தம் நுண்ணிய அறிவைச் செலுத்தி வெளியிட்டுள்ள அபிப்பிராயங்கள் எமக்கு முற்றும் உடன்பாடானவை. இம்முடிவினைக் கழ்வரும் நாலடிச் செய்யுட்கள் வறபுறுத்தும் :—

தன்னிலை கலங்கித் தன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானு நிலையினு
மேன்மேலுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான. —(அறிவுடைமை, 8)

எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட்டவருஞ் சுவர்க்கம் புகுதலால
தன்னாற்றானாகு மறுமை வடதிசையுங்
கொன்னாளர் சாலப் பலர். —(அறிவுடைமை, 8)

ஆடுகோடாகி அதரிடை நின்றதூஉங்
காழ்கொண்டகண்ணே களிறணைக்குங் கந்தாகும்
வாழ்தலுமன்ன தகைத்தே ஒருவனுந்
தாழ்வின்றித் தன்னைச் செயின். (தாளாண்மை, 2)

இதோடு இவ் விதி மதி வாதம் முடிவடையுமாக.

இவ்விஷயமாக இன்னும் பல அரிய கட்டுரைகள் வந்திருந்தும் எல்லாவற்றையும் வெளியிட நமது பத்திரிகை இடந்தரவில்லையென வருந்துகின்றோம்.—(ப.ர்.)

## ஐய வினாவிற்கு விடை.

---

### திருநாவுக்கரசு சுவாமிகளருளிய திருவாரூர்த் திருத்தாண்டகம் ஒன்பதாஞ் செய்யுள்.

புகையெட்டும் போக்கெட்டும் புலன்களெட்டும்
பூதங்களவையெட்டும் பொழில்களெட்டும்
கலையெட்டும் காப்பெட்டும் காட்சியெட்டும்
கழற்சே வடியணைந்தார் களைகளெட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மையெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்களெட்டும்
திகையெட்டும் தெரிப்பதற்கு முன்னே பின்னே
திருவாரூர்க் கோயிலாக் கொண்டநாளே.

#### சொற்பொருள்

**புகை யெட்டும்**—தூலவுடல் தோன்றுவதற்குக்காரணமாகிய அசுத்த மாயா தத்துவங்களாகிய கொத்துகளெட்டும்.

**போக்கெட்டும்**—மேற்படி தூலவுடம்பில் வினைகளைத் துய்க்கும் ஆன்மாவும் எழுபிறப்புமாகிய எட்டும்

**புலன்களெட்டும்**—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், மனம், புத்தி, அகங்காரமாகிய சூக்குமவுடல (புரியட்டகம்) எட்டுமே.

**பூதங்களவையெட்டும்**—ஐம்பூதங்கள், சூரியன், சந்திரன், ஆன்மாவாகிய மூர்த்தங்கள் எட்டும்.

**பொழில்களெட்டும்**—மேருமலையின் பக்கங்களினும் மேலுமாயுள்ள சோலைகளெட்டும்.

**கலையெட்டும்**—மூலவேதம் ௪ உபவேதம் ௪ ஆக வேதங்களெட்டும்

**காப்பெட்டும்**—(யானை, நாகம், மலை) ஆகிய காவல் எட்டும்.

**காட்சியெட்டும்**—செல்வங்கள் எட்டும்.

**கழற்சேவடி யணைந்தார்**—கழலையணிந்த சேவடியை அடைந்தவர்க்கு

**களைகளெட்டும்**—களைகணுயுள்ள ஞான குணங்கள் எட்டும் (எண்குணங்கள)

**நகையெட்டும்**—வாமை, சேஷ்டை, ரவுத்திரி, காளி, கலவி, காணி, பலவிகரணி, சர்வபூதமணி ஆகிய சத்திகளெட்டும்

**நாளெட்டும்**—சித்திரைப் பௌர்ணமி, ஆனித் திருமஞ்சனம், ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கு, மார்கழி திருவாதிரை, தைப்பூசம், மாசி கடலாட்டு, பங்குனியுத்திரம் ஆகிய நாளெட்டும்.

**நன்மை யெட்டும்**—அணிமாமுதலிய சித்திகளெட்டும்.

**நலஞ்சிறந்தார்**—நன்மை மிக்க பெரியோர்களுடைய

**மனத்தகத்து**—மனத்தில் ஒளிர்கின்ற

**மலர்களெட்டும்**—அஹிம்சை முதலியபுட்பங்களெட்டும், அன்றி இயமம் முதலிய யோகங்களெட்டும்

**திகையெட்டும்**—திக்குகளெட்டும்

**தெரிப்பதற்கு**—தோன்றுவதற்கு

**முன்னே பின்னே**—முற்காலமோ பிற்காலமோ

**திருவாரூர்**—திருவாரூரை

**கோயிலாக் கொண்டநாள்**—திருக்கோயிலாக் கொண்ட திருநாளை அருளிச்செய்வாயாக.

(எ-று.)

உயிர்கள் இம்மை, மறுமை, வீடு எய்துவதற்கு ஏதுவாயுள்ள மேற்கூறிய பரஞன்கும் இறைவனுக்குக் கோயிலாக இருத்தலின், அவை தோன்றுவதற்கு முன்னே பின்னே திருவாரூரைக் கோயிலாக் கொண்டநாள் என்பதாம்.

கலையெட்டும், பூதங்களெட்டும் என்பதை கலையெட்டு பூதங்கள் எட்டு எனத் திருத்தியிருக்கிறது அவ்வாறு பாட பேதமில்லை. இவை எப்படிப்பினும் காணலாம்.

இத்தாண்டகத்திற்குக் காமக்கூர் தமிழ்ப்பண்டிதர் மு. சுந்தர முதலியாரால் உரை தெரிந்தேன்.

உ. நமச்சிவாய முதலியார்,
வாழைப்பந்தல்.

124804



## சுகாதாரப் பகுதி

### வாந்திபேதி (காலரா)

இருமிகளினுலுண்டாகும் மற்றொரு மிக்க அபாயகரமான வியாதியானது வந்திபேதி (காலரா) ஆகும்.

இவ்விஷநோய் வைசூரி அல்லது அம்மையைவிட வெகு கொடியது. வெகு சீக்கிரத்தில் உயிரைப் போக்கக் கூடியது. ஆகவே, இக்கொடிய நோய் வருங் காரணங்களையும், அதைத் தடுக்கும் மார்க்கங்களையுங் கண்டறிவது அத்தியாவசியம்.

இதுவுமோர் தொத்து வியாதிதான். இந்நோய்க்கு "Comma Bacillus" என்னும் கிருமியே காரணம்.

இக்கிருமி நம் கட்புலனுக் ககப்படாதபடி வெகு சிறியது. இதை அணுதரிசனிக் (Microscope) கருவியினுல்தான் பார்க்கமுடியும். இவை மிக்க அசுக்தமான விடங்களில், அழுகி மக்கிய செத்தை, குப்பை, சாணம் முதலானவைகள் சேருமிடங்களில் விருத்தியாகின்றன. அசுத்தத் தண்ணீரில் ஆயிரக்கணக்காக வெகு சீக்கிரத்தில் பரவுகின்றன.

இக்கிருமிகள் நாம் உட்கொள்ளு மாகாரத்துடனே, பருகுந் தண்ணீருடனே தேகத்திற் புகின் இந்நோய் உண்டாகின்றது.

இக்கிருமிக ளிருக்கு மிடங்களில் ஈக்கள் உட்கார்ந்தால் அவைகளின் கால்களில் இக்கிருமிகள் ஒட்டிக்கொள்ளுகின்றன. ஈக்கள் அனேகமாக மிக்க அசுத்தமான இடங்களில் தான் அபரிமிதமாக வசிக்கின்றன. கிருமிகளை ஏற்ற ஈக்கள் உண்ணு முணவின் மேல் உட்கார்ந்தால் அக்கிருமிகள் ஆகாரத்துடன் சேருகின்றன அவ்வாகாரத்தை யுட்கொண்டால் உட்கொண்டவர் தேகத்தில் அவை செல்கின்றன. இவ்விஷ கிருமிகள் கலந்த அசுத்த ஜலத்தைப் பருகினுல் அவை தேகத்திற் புகுகின்றன. இவ்விதமுட்கொண்டவர்களுக்கு இந்நோய் உண்டாகின்றது.

ஆகவே, அசுத்த இடம், அழுக்கு உடை, பழைய, ஊசின, குளிர்ந்த ஆகாரம், கெட்ட தண்ணீர் முதலானவைகள் இந்நோய்க்குச் சிநேகமும், மானிடருக்குப் பகையுமாகும்.

இப்பகையை அறவே ஒழித்து ஆரோக்கியத்தைத் தேடுவதுதான் நாம் செய்யவேண்டிய முயற்சி.

இதை விடுத்து, முன்பு அனேகரும் இக்காலத்தில் சிறுபான்மையோரும், இதுவும் ஒரு துர்க்கையின் கூற்றென்று தேவதைகளின்மேல் பழி சுமத்தி, நிரபராதிகளான ஆடு கோழிகளைக் கொலை புரியவும், மதுபானஞ் செய்யவும் வழி தேடிக்கொண்டது என்ன பரிதாபமான பாப காரியம்.

"ஆவியொடு காய மழிந்தாலு மேதினியில்
பாவியென்ற நாமம் படையாதே."

"ஊனைத் தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே" என்னும் மூதோர் மொழிகளை வாளா விடுத்து வீணாயிருந்தால் கேடாய் முடியுமென்பதை யூகிக்கவேண்டும்.

இனி யாது செய்வதென்றால், இவ்வியாதியைத் தடுக்கும் மார்க்கங்களைக் கண்டறிந்து அதன்படி நடப்பதுதான் உசிதம்.

இந்நோயால் ஒருவன் பீடிக்கப்படுகிறான் என்பதைக் கீழ்க்காணும் குறிகளால் அறியலாம் :—

இந்நோய் கண்டவர்களுக்கு முதலில் அடிக்கடி தண்ணீர் போன்ற வாந்தியும் பேதியுமாகும். அப்பேதிமலம் கஞ்சித் தண்ணீர் போன்ற வெண்ணிற முடையதாகும். பிறகு நீர் கட்டும்; களைப்புமிகும். அச்சமயம்தான் அபாயம். தேகத்திலுள்ள நீர் வாந்தியாலும் பேதியாலும் வெளியாகி விடுவதால் நோயாளிக்குத் தாகமிகும்; கண்கள் உள்ளே போகும்; தாடைகள் பள்ளமாகும்; மேல்தோல் சுருங்கும்; தொண்டையடைத்துப் பேச்சுத் தடுமாறும்; நாடி சரியாக அகப்படாது.

இவைகள் எல்லாம் வெகு சீக்கிரத்தில் நடைபெறுதலால் அனேகர் உயிரிழக்கிறார்கள். ஆகையால் தான், தேகாபிமானங்கொண்ட மக்கள் இவ்வியாதிக்குச் சர்ப்பத்தைக் கண்டஞ்சுவதுபோ லஞ்சுகிறார்கள். இது இயற்கைதான்.

ஆகையால்தான், உடனே சிகிச்சை செய்தே தீரவேண்டும். அதைப்பற்றி ஆராய்வோம்.

இக்கொடிய நோய் வாராமல் தடுப்பதெப்படி? மீறிவந்தபின் அதினின்றுந் தப்பித்துக்கொள்ளுவதெப்படி? என்று உற்றுணர்ந்தறிய வேண்டும்.

முன் ஜாக்கிரதையாக வெள்ளம் வருமுன் அணைபோடுவதுபோல, வியாதி வாராமல் தடுத்துக்கொள்வது தான் மதியூகம் எங்ஙனமெனின்:—முனிசிபாலிடியுள்ள இடங்களில், வீட்டுக்குப்பை, செத்தை, முதலானவைகளை ஒன்றாகச் சேர்த்து வீதிகளில் வைத்திருக்கும் குப்பைக் கொட்டிகளுக்குள் போட்டுவிடவேண்டும். வீட்டிற்குள் தண்ணீர் தங்கி நாற்றமடிக்காவண்ணஞ் செய்து இல்லங்களை வெகு சுத்தமாக வைத்திருக்கவேண்டும். முனிசிபாலிடிக் குட்படாத இடங்களில், வீட்டுக்குப்பை செத்தைகளைச்சேர்த்துப் பிரதிதினமும் கொளுத்திவிட வேண்டும். பல விடங்களில் தண்ணீர் தங்கி நாற்றமெடுக்கா வண்ணம் ஓரிடத்தில் ஊற்றி செடிகளுக்குப் பிரயோஜனப்படும்படி செய்துவிட வேண்டும். பிரதிதினமும் நீராடிச் சுத்த ஆடைகளைத் தரித்துக்கொள்ளவேண்டும். நாம் உட்கொள்ளும் ஆகாரங்களின்மேல் ஈக்கள் உட்காராதபடி மூடிவைத்துக் காப்பாற்றவேண்டும். ஈக்களை முற்றும் ஒழிக்க முயலவேண்டும். பழைய ஊசிய தின்பண்டங்களைப் புசிக்கவே கூடாது. குளிர்ந்த, கெட்ட சாதத்தையோ, பதார்த்தங்களையோ உட்கொள்ளக்கூடாது. ஜலத்தைக் கொதிக்க வைத்து வடிகட்டிக் கொஞ்சம் ஆறவைத்துப் பிறகு குடிக்கவேண்டும். புதிதாய்ச் செய்த சாப்பாட்டைச் சாப்பிடவேண்டும். அழுகின, கெட்ட, கண்ட பதார்த்தங்களைத் தள்ளவே வேண்டும். அஜீரணமாகும் பதார்த்தங்களை மிதமாகச் சாப்பிடவேண்டும். பாலை நன்றாகக் காய்ச்சி ஈக்கள் விழாதபடிக் காப்பாற்றிக் குடிக்கவேண்டும். கள்ளில் ஈக்கள் மொய்த்து வீழ்ந்து இறக்கிறபடியால் மதுபானஞ் செய்வதை அறவே விடுதல் வேண்டும்.

இவ்விஷநோய் வந்தபிறகு என்னசெய்வதென்றால், அதற்குபாயம்.—

முனிசிபாலிடி உள்ள இடங்களிலிருக்கும் பிரஜைகள், இவ்வியாதி எங்கு கண்டதோ அங்குள்ள சானிடரி உத்தியோகஸ்தருக்கு உடனே தெரிவித்து விட்டு, அவர்கள்செய்யும் சிகிச்சைகளுக்கிடங்கொடுத்து அவர்கள் சொற்படி நடந்தால்போதும்.

அவர்கள் செய்யும் முயற்சியின் நோக்கமாவது நோயாளி பிழைக்கவும், இத்தொத்து வியாதி பரவாமலிருக்கவும் செய்வதுதான். அவர்கள் நோயாளியைத் தொத்து வியாதி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி அவர்களுக்குச் சிகிச்சை செய்வர். நோயாளி இருந்த வீடு முற்றும் மருந்து கலந்த ஜலத்தால் (hycol lotion) சுத்தஞ் செய்வதும், கந்தைகளையும் உபயோகமற்ற வஸ்துக்களையும் கொளுத்தி விடுவதும் இந் நோய்க்குக் காரண பூதங்களான கிருமிகளை முற்றுமழிக்கும் வழிகளாம்.

இன்னுமொரு முக்கியமான விஷயமாவது:- வியாதி அண்டிய இடங்களி லிருக்கும் ஜனங்கள் (Inoculation) காலராவைத் தடுக்கும் மருந்தை அடக்கிக்கொண்டிருக்கும் ஊசியினால் டாக்டர் மூலமாகத் தம்முடம்பிலேற்றிக் கொள்வது. இதனால், காலரா பூச்சிகள் எவ்விதமாகவோ உடம்பிற் புகுந்தாலும், அவைகள் இறக்குமேயொழிய உடம்பில் நோய் உண்டாகாது.

முனிசிபாலிடி இல்லாத கிராமங்களிலும் இந்நோய் அணுகினால், அதைத் தடுக்க வேண்டுமான முயற்சிகள் செய்யத் தக்க ஏற்பாடுகள் கவர்ன்மெண்டு அதிகாரிகள் செய்திருக்கின்றனர். அவைகளை உபயோகப்படுத்திக் கொள்ளாததுதான் நம்பிழை.

இந்நோய் கண்டவுடனே ஜனங்கள் கிராம முனிசீப்புக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் தாசில்தாருக்குத் தெரிவிப்பார். அவர் மூலமாக எல்லாச் சௌகரியங்களுங் கிடைக்கும்.

அவர்கள் முதலில் சங்கதி தெரிந்து வந்து சிகிச்சைகள் செய்யச் சிறிது தாமதிக்குமாகையால், அதன் முன்பாகவே விஷகிருமிகள் பரவா வண்ணம் சிற்சில ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம். அதாவது, நோயாளியின் வாந்திபேதி இவைகளைக் குப்பை செத்தைகளில் கலந்து கொளுத்தி விடவேண்டும். மருந்து (hycol) கிடைத்தவர்கள் அதை உபயோகப்படுத்தலாம்.

மேற்சொன்னவைகள் சரியான மார்க்கம்; எல்லோரும் கவனித்து நடக்கக்கூடிய வழி. அவைகளைக் கையாள முயலுவதில் பலனுண்டென்று தீர்க்கமாகச் சொல்லுவோம்.

இவைகளை விடுத்துக் காலரா துர்க்கையின் விளையாட்டென்னும் புராதன நம்பிக்கையைக்



கொண்டஞ்சும் சிலர் இன்னும் ஆடு கோழிகளைக்கொன்று பாபமேற்றும், மதுவுண்டு உடல் கெட்டும் வருந்துபவர்களைக் கண்டு பரிதபித்துக் காலராவின் தன்மையையும் அதைத்தடுக்கும் முறைகளையும் இங்கு எழுதலாயிற்று.

முடிவாகச் சுத்தப் பிரம சொரூபமாகிய சுப்ரமண்யக் கடவுளின் சகோதரர் மரபில் வந்த நம் செங்குந்தர்குல திலகர்களாவது சேர்க்கையின் தோஷத்தால் வந்த துர்க்கிர்த்தியங்களை விடுவது மிகவும் இன்றியமையாதது.

மா. பாமதுநாத முதலியார்,
சானிடெரி இன்ஸ்பெக்டர், மயிலாப்பூர்.

---

## வாந்தி பேதியைத் தடுக்க.

(திருவாரூர் முனிசிபல் வைத்தியர் திரு. கண்ணுசாமி அவர்களின் அறிக்கை.

பொதுவாய் நாம் இருக்குமிடத்தையும் குடித்தண்ணீரையும் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டியது. குடித்தண்ணீரைக் காய்ச்சி வடிகட்டி உபயோகிக்க வேண்டும் காலராகாட்களில் கிணற்றுத்தண்ணீரை உபயோகித்தால் காலரு பரவாது.

தின்பண்டங்களில் ஈக்கூட்டங்கள் மொய்த்தால் கட்டாயம் காலராபரவும். ஊசல், புளித்தல், அழுகல் பதார்த்தங்களையும், மாப்பண்டங்களையும் அறவே நீக்கல் வேண்டும்.

அசுத்தமான இடங்களில்தான் காலரு வருமென்று ஞாவாசிட்டம் சற்கடி படலத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது பாருங்கள்.

இந்த கொடியநோய்க்கு உடனே கொடாத மருந்தும் சிகிச்சையும் பிரயோஜனமில்லையென்பது அனுபவம். தாகம் அடக்கத் தண்ணீர் கொடாதவர் நோயாளிக்கு விரோதியென்று சொல்லலாம்.

வேப்பிலையும் ஓமமும் கருக்கிட்டுக் கொடுக்கலாம்.

மஞ்சளும் சுண்ணாம்பும் கருக்கிட்டு கொடுக்கலாம்.

சூடமும் சாம்பிராணியும் வகைக்கு ¼-பலம், லிங்கம் விராகனிடை 1, 3-ம் தேன்விட்டரைத்து அடிக்கடி தேனில் கொடுக்கலாம். தப்பாக்கிமருந்தை 2 அரிசியிடை வீதம் தேனில் கொக்கலாம். சூடப்பதங்கத்தைத் தேனில் கொடுக்கலாம். வெடியுப்பு, வெங்காரம், நவச்சாரம் 3-ம் அரைத்து வயற்றில் தடவினால் நீரைப்பிரிக்கும் பார்லியரிசி தண்ணீர் நீரைப் பிரிக்கும்.

காயம், வசம்பு, சுட்டசுரி, ஓமம், மிளகு வகைக்கு பலம் ¼, அபின் விராகனிடை 1-ம் சேர்த்துத் தேனில் அரைத்து அடிக்கடி தேனில் கொடுக்கலாம்.

சூடம் பலம் 1, ஓம உப்பு பலம் ¼, பொரிஞ உப்பு விராகனிடை 1. 3-ம் பொடித்துச் சீசாவில் வைத்தாற் உருகித் தைலமாகும். ஒருசேர் தண்ணீரில் 10-துளிவிட்டுக் குலுக்கி வைத்துக்கொண்டு ½-மணிக்கு ½ அவுன்சு கொடுக்கலாம்.

கலியாண முருங்கம்பட்டையை அரைத்து கால் பெருவிரலில் கட்டினால் கெண்டை ஏறுதலை நிறுத்தும்.

நோயாளியுடன் கட்டி புரளுவதால் நோயாளிக்கும் நன்மையில்லை, நமக்கும் நோய் பிடிக்க இடமுண்டாகும்.

இந்த நோயாளிக்கு ஒரே முறையாயும் ஒரே மருந்தாயும் பொறுமையாய்க் கொடுக்காமல் கண்ணில் கண்ட மருந்தையெல்லாம் மாற்றி மாற்றி வேளைக்கொரு மருந்தைக்கொடுத்து வயிற்றை நிறைப்பதால் பிரயோஜனமில்லை. அப்படிச் செய்வதினாலேயே இந்த நோயுக்கு மருந்து ஒன்றுமில்லையென்று சொல்லுகிறார்கள். பிழைத்தாலும் எந்த மருந்தினாலென்று கண்டு கொள்ள முடியவில்லை.

வறுக்காத மிளகாய் பலம் 1, பொரித்தகாயம் விராகனிடை 1, சூடம் விராகனிடை ½, 3-ம் எலுமிச்சம் பழச்சாறுவிட்டரைத்துச் சுண்டக்காயளவு 3, 4 வேளை கொடுக்கலாம்.

கொடிவேலிவேர், சூடம், சாம்பிராணி, லிங்கம் சரி இடை சேர்த்து தேனில் அரைத்து சுண்டக்காயளவு தேனில் அடிக்கடி கொடுக்கவும்.

வெளியூர்காரர்களுக்கு நமது காலரா மருந்தும் கஸ்தூரி மெழுகும் தேவையானால் அவரவர்கள் சொந்தச் செலவில் செய்து கொடுக்கப்படும்.

### பிளேக் நோய்க்கு.

N.B.—பத்து மடங்கு ரஸ செந்தூரம் ஒருமடங்கு (சில்வர்சைட்ரேட்) காடிக்காரம் சேர்த்து கல்வத்தில் 24-மணிநேரம் அரைத்து, அரிசியிடை வீதம் 4-மணிக்கு ஒரு தடவை வீதம் தாய்ப்பாலில் கலந்து கொடுக்க நல்ல குணம் செய்யும்.

---

## இலகு வைத்திய முறைகள்.

### திருவாரூர் முனிசிபல் சித்தவைத்தியசாலை வெளியீடு.

இளநீர் அல்லது கம்பஞ் சோற்று நீராகாரம் அல்லது ஆவாரம் சமூலகியாழத்தில் ஊறப்போட்டு அவித்து உலர்த்தி இடித்து இளநீரில் சோற்றுக்கற்றாழை மடல்களைப் பிசைந்து அதை வடிகட்டின தண்ணீரில் மேலே சொல்லியபடி இடித்த முத்தக்காசு

டையைக் கரைத்துக் காச்சி வடித்த ஆணைக் கெண்ணெ படி 1, பசுவின் நெய் படி ¼, விட்டு, வால் மிளகு, ஜாதிக்காய், சமூலம், சிரகம் வகைக்கு பலம் ஒன்று அரைத்து ஒரு சேர் பசுவின் பாலில் கரைத்து எண்ணெய்யுடன் சேர்த்து மெழுகு பதமாய்க் காச்சி வடித்து அதில் பவளற்பம் மான்கொம்பு பர்பம், சிலாசத்து பற்பம் இம்மூன்றும் வகைக்கு விராகனிடை மூன்று, கோரோஜனை விரா. 1, குங்குமப்பூ விராகனிடை 1, கஸ்தூரி கண்டு பலம் 1, இவைகளைப்பொடித்துப் போட்டுவைத்துக்கொண்டு காலை, மாலை, காசிடை சாப்பிட்டு வந்தால், சனைச்சூடு, வெட்டைச்சூடு, பித்தச்சூடு, மூலச்சூடு, காசம், க்ஷயம், கண் எரிவு, கைகால் எரிவு, அஸ்திச்சூடு, இரத்த பித்தரோகம், காமாலை, நெஞ்சுவலி, முதலிய கொடிய வியாதிகளும் நீங்கும். சஞ்சீவி போன்ற மருந்து; எமது அனுபவம்.

இதில் பூரகம் செம்பு செந்தூரம் சேர்த்துக் கொடுத்தால் காயசித்தியும் இணையல்ல. அதன் செய்முறை சிலருக்கு அருவருப்புண்டாகும் என்று அதை எழுதவில்லை. காச ரோகத்துக்கு அரிய முறையாம்.

ஜீ கண்ணுசாமி பிள்ளை, V. B. P.
தமிழ் சித்த வைத்தியாபிவிர்த்தி சங்கம் &
முனிசிபல் தமிழ் வைத்தியர், திருவாரூர்.

## மாதர் பகுதி

### க்ரிஸல்டா.

### ஓர் உத்தம ஸ்திரீயின் சரித்திரம்.

வாழ்வது வந்தபோது மனந்தனில் மகிழவேண்டா
தாழ்வது வந்தாலுந் தளர்வரோ தக்கோர் மிக்க [ம்
வூழ்வினை வந்ததனை யொருவரால் விலக்கப்போமோ
ஏழையாயிருந்தோர் பல்லக் கேறுதல் கண்டிலீரோ.

ஐரோப்பா கண்டத்திலுள்ள இட்டாலி தேசத்திற்கு மேற்கே விசுவஸ் என்ற ஒரு மலை உண்டு. அம்மலையின் அடிவாரத்தில் வால்டேரென்னும் அரசனால் ஆண்டுவரப்பட்ட சாலூஸ் என்ற ஒரு நகரமிருந்தது. ஒரு நாள் அந்நகரவாசிகள் அனைவரும் தங்கள் தங்கள் வீட்டை அலங்கரித்துத் தாங்களும் நல்லுடை தரித்து உல்லாசமாய் உலவியிருந்தனர்; எங்குப் பார்த்தாலும் தோரணங்களும் பந்தல்களும் விமரிசையா யிடப்பட்டிருந்தன. இராஜாங்கத்தில் சேவகனாயிருந்த தன் அண்ணனைக் காண இட்டாலி பட்டினத்தினின்றும் ஒருவன் அத்தினத்தில் அந்நகருக்குச் சென்றான். சாலூஸ் நகரத்திற்கு அவன் செல்லும்பொழுது அவ்வூர் அதிசயங்களைக் கண்டு ஆச்சரியமடைந்தான். வால்டேர் மன்னனுக்குக் கலியாணம் நடக்கப் போவதாக எங்குப் பேசிக்கொண்டிருப்பதையும் அவன் கேள்வியுற்றான். அவனுடைய அண்ணன் தன் தம்பியைக் கண்டதும் "வாப்பா, நல்ல சமயந்தான் நீ இங்கு வந்தது" என்று உபசரித்தான்.

தம்பி :—வால்டேர் அரசனுக்குக் கலியாணமாமே, எப்பொழுது ?

அண்ணன் :—நாளைக்குத்தான்.

த :—அப்படியா, பெண் எந்த ஊர் ? அவர்கள் பணக்காரர்கள்தானா ?

அ :—அதுதான் தெரியாது! மணமகள் யாரென்பதே இன்னும் யாருக்கும் தெரியாது.

த :—என்ன ! பெண் தெரியாதா ?

அ :—புதுமையாகத்தா னிருக்கும். முதலில் வால்டேர் மன்னர் கலியாணமே செய்து கொள்ளமாட்டே னென்றனரே. ஏதோ சிலர் அரசனிடம் துணிவாய்ச் சென்று "இராஜ இராஜரே! தாங்கள் ஒரு நற்புத்திரனைப் பெறுவிடில் உங்களுடைய விருத்தாப்பிய காலத்தில் இராஜ்ஜியபாரத்தை ஏற்றுக் கொள்பவர் யாவருளர்?" என்று பலவாறு முறையிட்டு அவர் மனத்தைச் சிறிது மாற்றினர். அரசரும் அவர்கள் வருந்திச் சொல்லிய வேண்டுகோளைப் புறக்கணிக்காது தான் கலியாணம் பண்ணிக் கொள்வதாகக் கூறினார். ஆனால் அவரே பெண் தேடிக் கொள்வதாகச் சொன்னார். நல்ல சுபதினமொன்றையும் குறிப்பிடச் சொன்னார். நாளைதான் குறிப்பிட்டிருக்கிறது. அவர் பெண் எங்கு பார்த்து வைத்திருக்கிறாரோ தெரியாது.

த :—இவ்வளவுதானா! ஊர் ஆடம்பரத்தைப் பார்த்தால் இன்றே கலியாணமென்றெண்ணினேன்.

அ :—எப்படியிருந்தாலும் நாளைத் தெரிந்துவிடுகின்றது. எனக்கு நேரமாயிற்று நடந்துபோய் வருகிறேன். நீ—



த :—நானும் ஊருக்குப் போகிறேன். அரசனுக்குக் கலியாணமாயிருப்பதால் உங்களுக்கு இன்னும் இரண்டு மூன்று தினத்திற்கு ஒழியாது. ஒரு வேளை நாளை வந்தால் வருகிறேன்.

இருவரும் பிரிந்து, அண்ணன் அரண்மனைக்கும் தம்பி தன்னூருக்குமாகச் சென்றனர். சாலூஸ் நகர முழுவதும் மறுநாள் நடக்க இருந்த கலியாணத்தை எதிர்பார்த்திருந்தது. மறுநாள் காலை வழக்கமாய் வேட்டையாடப் போவது போல் அரசன் சாலூஸ் நகரத்திற்கு அடுத்த ஒரு சிறுகிராமத்திற்குச் சென்றான். அங்கு வசித்து வந்த ஜனிகுலா என்னும் ஒரு ஏழைக் குடியானவன் வீட்டிற்குள் சென்று அக்குடியானவனைக் கண்டு "உமது குமரி க்ரிஸல்டாவின் மீது யான் காதல் கொண்டேன். அவளை எனக்கு விவாகம் செய்து கொடுப்பீரா?" என்று வினவினான். "தங்களிஷ்டப்படியே ஆகட்டும்" என்று குடியானவனும் ஒப்புக்கொண்டான்.

பெண் பேசி முடிந்ததும் க்ரிஸல்டாவை வால்டேர் தன் குதிரை மீதேற்றி அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். வால்டேருக்கும் க்ரிஸல்டாவிற்கும் கலியாணம் விமரிசையாய் நடைபெற்றது. நகரமாந்தரனைவரும் பெண்ணின் குணத்தையும் அழகையும் புகழ்ந்து பேசிய போதிலும், தமது அரசன் மதிகெட்டு ஏழைக் குடும்பத்துப் பெண்ணை மணந்தானே என்றுமட்டும் சிறிது வருந்தினர்.

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்று வள்ளுவனார் கூறிய குறளுக் கிலக்காய் ஒழுகும் க்ரிஸல்டாவை வாழ்க்கைக்குத் துணையாகக் கொண்டு வால்டேர் மன்னன் இல்லற வழியிலே தனது வாழ்நாட்களைக் கழிப்பாராயினன். அப்படி ஒழுகிவரும் நாளில்

"பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்
றென்னுடையரேனு முடையரோ, இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களை யிங்கில்லாதவர்"

என்ற குறை அத்தம்பதிகளுக்கில்லாவண்ணம் க்ரிஸல்டாவிற்கு ஒரு அழகமைந்த பெண் குழந்தை பிறந்தது. அவளும் பொன்போல் போற்றி வளர்க்கப்பட்டாள்.

இப்படிச் சுகமாய் வளர்ந்துவரும் நாளில் ஒருநாள் அரசன் தன் மனைவியைஅழைத்து, "குடிகளெல்லோரும் நமக்குப் பெண்குழந்தை பிறந்ததற்கு வருந்துகின்றனர். அவர்கள் இராஜ்ஜியத்திற் குரிய ஓராண்மகவு வேண்டுமென்றல்லவோ என்னைக் கலியாணம் செய்து கொள்ள வற்புறுத்தினர். ஆகையால் எனக்கு அப் பெண் குழந்தையை வைத்திருக்க மனமில்லை அதை எங்கேயாகிலும் கானகத்திலெறிந்துவிடச் சொல்லுகிறேன். அதைக் கொண்டுவா" என்று கூறினான். கணவன் சொல்லைத் தட்டாத கற்பு வாய்ந்த க்ரிஸல்டா அரசன் இஷ்டப்படியே தன் அருமைக் குழவியைக் கொண்டுவந்து கொடுத்தனள். அவனும் அதை வாங்கி ஒரு வேலையாள் கையில் கொடுத்து அனுப்பிவிட்டான். பின் ஐந்து வருடமானதும் க்ரிஸல்டா ஒரு ஆண்மகவை யீன்றனள்.

அவ்வாண் குழந்தையையும் வால்டேர் பெண் குழந்தையைப் போலவே அப்புறப்படுத்திவிட்டான். க்ரிஸல்டா தன் குழந்தைகளை இழக்க நேரிட்ட வருத்தமிருப்பினும் ஒரு சிறிதும் தன் கணவனிடம் அன்பில் குன்றினாளில்லை; என்றும் முகமலர்ந்து தன் கணவனுக்கு மனவருத்தம் வராவண்ணம் காத்து வந்தாள்.

இவ்வளவு கடுஞ் செயல்களையும் தன் மனைவியை வருத்தவேண்டுமென்றெண்ணி அரசன் செய்தவனல்லன்; அவளுடைய கற்பைப் பரிசோதித்து அவளுடைய உண்மைக் கற்பைப் பிறருக்கு எடுத்துக் காட்டவேண்டுமென்றே செய்தான். இன்னும் கடைசியாக ஒருமுறை பரிசோதிக்க வேண்டுமென்றெண்ணி அரசன் ஒருநாள் அவளை அழைத்து, "என் அருமை க்ரிஸல்டா, யான் உன்னை உன் தகப்பனாரிடம் அனுப்பிவிடலாமென்று நினைக்கிறேன். ஏனெனில், குடிகளெல்லோரும் என்னை இழிகுடியில் பெண் கொண்டேனென்று பழிக்கின்றனர். ஆகையால் வேறு நல்ல அரசகுமரியை மணம் புரிந்துகொள்ள எண்ணியிருக்கிறேன்" என்று சிறிது அழுத்தமாய்ச் சொன்னான். இதைக் கேட்டதும் க்ரிஸல்டா, "நாதா! யான் உங்களை மணம் புரிந்துகொண்டபொழுதே என்னுடைய ஏழ்மை நிலைக்கும் உங்களுடைய இராஜரீகத்துக்கும் உள்ள வித்தியாசத்தை யுணர்ந்து நான் உங்களுக்குரிய மனைவியல்ல என்றெண்ணினேன். மனைவியான பிறகும் உங்களுக்குப் பணிவிடை புரிபவளென்றே எண்ணி யிருந்தேனே யொழிய இராஜ்ஜியத்திற்குத் தலைவி என்று நினைக்கவில்லை. அதுபோல் நான் சாகுமளவும் இருக்கப்போகிறேன். ஆகையால் நீங்களும் உங்களுக்கு வாய்க்கப்போகிற புண்ணியவதி

யும் இன்புற்று வாழுங்கள். நான் என் தாய் வீட்டைகிறேன்" என்று வினயத்துடன் பதிலளித்துத் தான் தாய்வீடு போய்ச் சேர்ந்தனள்.

ஜனிகுலா என்பவன் தன் பெண்ணின் நிலைமையைக் கண்டதும் கண்ணீர் விட்டுக் கதறினன்: "ஐயோ! பணக்காரனென்று பிள்ளையின் குணத்தைச் சிறிதேனும் கவனியாமல் பெண்ணைக் கொடுத்துவிட்டுப் பின் அப்பெண் வருந்தத் தாங்கள் மனம்பொறுது வருந்துகிறவர்கள் எத்துணை பெயரையோ கண்டிருந்தும், யானும் அம் மடவேலையைச் செய்தேன். எல்லாம் விதியின் பயன்" என்று வருந்தினன். ஊரிலுள்ளோரும் அரசன் இரண்டு பிள்ளைகளைக் கொலை செய்த பாதகனென்றே மதித்து அவனிடம் வெறுப்புற்றனர்.

யாரெவ்விதம் நினைத்தபோதிலும் க்ரிஸல்டா மாத்திரம் தன் கணவனை நினைத்து அவனது க்ஷேமத்தையே கருதிக்கொண்டிருந்தாள். இப்படியிருக்க ஒருநாள் அரசன் தன் க்ரிஸல்டாவை வருவித்து "பெண்ணே, இப்பொழுது வரப்போகிற எனது மணமகளை நீ வரவேற்கவேண்டும்" என்று கட்டளையிட்டான். இதைக் கேட்ட அவள் 'என் கணவனுக்கு மறுபடியும் பணிவிடை செய்ய என்ன புண்ணியம் செய்தேனோ' என்று மகிழ்ந்து, மணமகள் வரவை எதிர்பார்த்திருந்தனள்.

இங்கு இப்படியிருக்க, வால்டேரினுடைய சகோதரன் ஓரிளவரசியையும் அவள் தம்பியையும் ஆபரணங்களாலலங்கரித்துச் சாலூஸ் நகரத்திற்கு அழைத்து வந்தனன். க்ரிஸல்டா பன்னிரண்டாண்டமைந்த அவ் விளவரசியைத்தான் தனது கணவர் மணக்கப் போகிறாரென்று நினைத்து வந்த அழகமைந்த இராஜ புத்திரியையும் அவள் தம்பியையும் வரவேற்றனள். ஊர் முழுதும் வால்டேரரசன் பன்னிரண்டாண்டமைந்த ஒரு இராஜ குமரியை விவாகம் செய்து கொள்ளப் போகிறாரென்ற வதந்தி பரவியது.

வீண்வதந்தி ஒருபுறம் பரவ, அரண்மனையில் அரசன் க்ரிஸல்டாவை வரவழைத்து "வந்திருக்கும் மணமகள் எவ்வித முள்ளாள்" என்று விசாரித்தான். அதற்கு அவள், "உங்களுக்கேற்ற அழகும் அடக்கமும் வாய்ந்த மனைவி அவளே; உங்களை மணக்க என்னைவிடப் பன்மடங்கு தகுதியுள்ளவள்" என்று களிப்புடனுரைத்தாள். வால்டேர் க்ரிஸல்டாவினுடைய அரிய பதிலைக் கேட்டு அவளைப் பின்னும் பரிசோதிக்க மனமில்லாதவனாய் அவளை நோக்கி, "கற்பிற் சிறந்த காதலியே! உன்னுடைய குணத்தை மெச்சினேன். நீ வரவேற்ற இரண்டு குழந்தைகளும் உன்னுடையவர்களே. அவர்கள் இதுகாறும் என் சகோதரன் வீட்டில் வளர்ந்து வந்தனர். உன்னுடைய குணத்தைப் பரிசோதிப்பதற்கே உன்னை இவ்வளவு துன்பத்திற் காளாக்கினேன். அதையெல்லாம் இனி யெண்ணாதே, மறந்துவிடு" என்று மகிழ்ந்து கூறினன். க்ரிஸல்டாவும் தன் இரு குழவிகளையும் கட்டி அணைந்து முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினள்.

பிறகு அரசன் தன் உத்தம மனைவியின் உயர்ந்த கற்பைக் குடிகளுக்குப் புகழ்ந்துகூறி அவர்களும் அவளைப்போற்றத் தன் மனைவியுடன் இரு குழந்தைகளையும் வைத்துக்கொண்டு சாலூஸ் நகரத்தை நீண்ட காலம் அரசாண்டான்.

கற்பி லருந்ததியையும் பொறுமையில் பூமிதேவியையு மொத்த க்ரிஸல்டாவினிடமிருந்து மாதர்கள் தங்கள் தங்கள் கணவர்களைப் போற்றி வாழவேண்டு மென்று கற்றுக் கொள்ளல் அவசிய மெனினும், இக்கதையைப் படிக்கும் ஒவ்வொரு மனிதரும் மகளிரும் கற்றுக் கொள்ளவேண்டிய முக்கிய நீதி ஒன்றுண்டு. அது யாது?

வால்டேரெப்படி தன் மனைவியின் குணத்தைப் பரிசோதித்து அவளைச் சீர்திருத்தவேண்டுமென் றெண்ணினனோ அதுபோல கடவுள் தமது குழந்தைகளாகிய நம்மைச் சீர்திருத்த எண்ணுகிறார்; நமது துற்குணத்தைப் போக்கவோ அல்லது நற்குணத்தை உறுதிப்படுத்தவோ நம்மைப் பரிசோதிப்பார். ஆனதுபற்றி வாழ்க்கையில் நமக்கு இன்னல்கள் பல அடிக்கடி நேரக்கூடும்; இனியவையும் நேருதல் கூடும். இனிது வந்தபோது தன்னை மறந்து சந்தோஷித்தலும் தவறு. இன்னல் வந்தபோது அதைப் பெரிதும் போற்றுவதும் தவறு. சிலர் தங்களுக்கு ஏதேனும் சிறிய துன்பம் நேரிடினும், "இக்கலியுகத்தில் கடவுளேது! கடவுளிருந்தாலிப்படித் துன்பங்கள் நேருமா? (தாங்கள் நல்லவர்களென்றெண்ணி) நல்லவர்கள் வருந்துவர்களா?" என்று பலவாறு—இன்னும் கேவலமாகவும்—பேசுவதைக் கண்டுள்ளோம். மற்றும் சிலர் இவ்வாழ்க்கை என்ன வாழ்க்கை என்றெண்ணித் தற்கொலை புரிந்து கொள்ளவும் எண்ணுகிறார்கள். என்னே இவர்தம் பேதைமை!

மா. ப. தியாகராஜன்,
இராஜதானிக் கல்லூரி, சென்னை.

# தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க நிருவாக சபைக் கூட்டத்தின் தீர்மானங்கள்.

192? ஆகஸ்டு௴ 20௳ திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்குச் சென்னை அரண்மனைக்காரன் தெரு 31-வது இல்லத்தில் நமது தலைச் சங்கத்தின் நிருவாக சபைக் கூட்டம் திரு. S. குழந்தைவேலு முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடியது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.—

### மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்.

1. சென்ற வருடம் நமது சங்கத்தின் உபகாரச் சம்பளத்தைப் பெற்று மேல் வகுப்புக்கு மாறிய காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் C. பக்கிரிசாமி (எப்.ஏ.), S. சண்முகம் (எப்.ஏ.)

மாணம்பதி K. சிவப்பிரகாசம் (4-வது பாரம்)

ஷை A. சந்திரசேகரன் (3-வது „ )

திருமயிலை C. பாலசுந்தரம் (2-வது „ )

ஷை S. காளத்தி (டிராப்ட்ஸ்மென் வகுப்பு)

அம்மையப்பட்டு T. பொன்னுசாமி (5-வது பாரம்)

திருநெல்வேலி P. பொன்னுசாமி (எப்.ஏ.)

இவர்களுக்கு அரைச் சம்பளங் கொடுக்க வேண்டியது.

2. புதிதாக இவ்வருஷம் மனு அனுப்பியவர்களில

திருநெல்வேலி V. சுப்பிரமணியம் (1-வது பாரம்)

அம்பாசமுத்திரம் N. அருணாசலம் (5-வது பாரம்)

சிதம்பரம் S. சதாசிவம் (6-வது பாரம்)

மதுரை M. அங்குசாமி (எப்.ஏ.)

இவர்களுக்கு அரைச்சம்பளம் கொடுக்க வேண்டியது.

### மாணவர்க்குச் சாப்பாடு இருப்பிடம்.

3. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஜூனியர் பி.ஏ. வகுப்பில் வாசிக்கும் சேலம் ஜில்லா மோகனூர் கிராமத்து C. S. செல்லாண்டிக்குச் சாப்பாட்டுச் செலவிற்காக ஷை மாணவன் சென்னையிலிருக்கும் மாதங்களுக்கெல்லாம் மாதம் ஒன்றுக்கு ரூபா 8 வீதம் கொடுத்து வரவேண்டியது.

4. இவ்வருடம் சம்பளத்திற்கும் சாப்பாட்டிற்கும் இருப்பிடத்திற்கும் நமது சங்கத்தின் உதவியை நாடிய, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எப்.ஏ. வகுப்பில் வாசிக்கும் திருச்செங்கோடு பொ. முனியப்பனுக்குத் தமது இல்லத்தில் இருப்பிடமும் உணவுந்தந்து ஆதரிக்க ஏற்றுக் கொண்டிருக்கும் சங்க அமைச்சர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., அவர்களுக்கு இச்சங்கம் நன்றிசெலுத்துகின்றது.

5 மலையாளம், கோயமுத்தூர், தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களிலிருந்து மனு அனுப்பியுள்ள மாணாக்கர்களைப்பற்றி இன்னும் சிலவிவரங்கள் தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால் விவரங்கள் தெரிந்த பிறகு அவர்கள் மனுக்கள் கவனிக்கப்படும்.

### கிளைச்சங்கங்கள்.

6. நமது சங்கத்தின் அங்கங்களாவதற்கு மனுவும் கட்டணமும் அனுப்பியுள்ள கீழ்க்கண்ட இடங்களிலுள்ள செங்குந்தர் சங்கங்கள் தலைச்சங்கத்தின் அங்கங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன:—பெருநகர், குருவராஜப்பேட்டை (வாலிபர்), பெரிய கயப்பாக்கம் (வாலிபர்), காஞ்சி ஐயன்பேட்டை, யாழ்ப்பாணம் திருநெல்வேலி, பவானி, கட்டிபபாளையம், சென்னை (வாலிபர்), உளனியூர், மணிமங்கலம்.

7. நமது சங்கத்தின் அங்கங்களாவதற்கு மனு அனுப்பிக் கட்டணம் அனுப்பாமலோ, கட்டணம் அனுப்பி மனு அனுப்பாமலோ இருக்கும் செங்குந்தர் சங்கத்தினர் தயமால் அனுப்பப் பெறுமல் இருக்கும் கட்டணத்தையும் மனுவையும் சீக்கிரமே அனுப்பிவைக்கும்படி வேண்டிக் கொள்ளப் பெறுகின்றனர்.

### செங்குந்த மித்திரன்.

8. ஆவணி மாதம் முதல் செங்குந்த மித்திரனை யாதொரு போஷகரின் உதவியுமின்றிச் சங்கமே நடத்த வேண்டியதாக இருக்கிறபடியால், சந்தா தொகையைச் செப்டம்பர் மாதம் 15௳க்கு மேலும் பாக்கி வைத்திருக்கும் சந்தாதாரர்களிடமிருந்து பாக்கித்தொகையை அடு

த்த மாதப் பத்திரிகையை வி. பி. மூலமாக அனுப்பி வசூலிக்கவேண்டியது.

பிரசாரம்.

9. அடுத்தபடி வடஆர்க்காடு, தென்னார்க்காடு சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் பிரசாரம் செய்யவேண்டியது.

செங்குந்த பட்டதாரிகளுக்கு விருந்து.

10. இவ்வருடம் சென்னைச் சர்வகலாசாலைப் பட்டங்களைப்பெறும் செங்குந்த பட்டதாரிகளுக்கு ஒரு வரவேற்பு விருந்து நமது சங்கத்தார் நடத்தவேண்டியது.

செங்குந்தர் புராணம்

11. திருப்பத்தூர் திருவாளர் பண்டிதர் முருகைய முதலியார் அவர்களிடமிருந்தும் திருவாளர் K. A. ஷண்முக முதலியார் அவர்களிடமிருந்தும் வந்துள்ள கடிதங்களில் அவர் வசம் தற்காலம் உள்ளதாகக் கண்டுள்ள காவிரூல் மழுவெடுத்த ஞானப்பிரகாச சுவாமிகள் இயற்றிய 'செங்குந்தர் புராண'த்தின் பிரதியை இச்சங்கம் அச்சிடத்துணிவதற்குமுன், அதை வரவழைத்துப் பரிசீலனை செய்து தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கத் திருவாளர்கள் ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., மா. அ. கனகசபை முதலியார், தி. அ. சண்முக முதலியார் ஆகிய மூவரையும் இச்சங்கம்வேண்டிக்கொள்கிறது.

தி. நா. சபாபதி முதலியார்,
ம. சண்முகசுந்தர முதலியார்,
அமைச்சர்கள்.

# செங்குந்தர் கிளர்ச்சி

## தலைச்சங்கத்தின் பிரசாரம்

### தென்னார்க்காடு ஜில்லாவில் பிரசாரம்

#### புதுச்சேரி

5-5-28-ந்தேதி இரவு காஞ்சிபுரத்தினின்றும் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் செங்கற்பட்டிற்கு வர, சென்னையினின்றும் திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் செங்கற்பட்டில் வந்து அவரோடு கலந்துகொண்டு இருவருமாக மறுநாட் காலை புதுச்சேரியை யடைந்தனர். அங்கு திருவாளர்கள் சு. அண்ணாமலை முதலியார், எஸ். பி. அண்ணாமலை முதலியார் முதலியவர்கள் வரவேற்று உபசரித்தனர். பிரசாரகர்கள் பல செங்குந்தர்களையும் பார்த்துப் பேசினார்கள். புதுச்சேரி கவர்ண்மெண்டு செகரிடரியட் ஜெனரல் திருமிகு ஆ. வெ. முத்தையா முதலியாரவர்கள் B.A.B.L. காட்டிய ஊக்கம் மறக்கற்பாலதன்று.

பின்பு 7-5-28-ந்தேதி மாலை பிரசாரகர்கள் முத்தியாலுப்பேட்டை சென்றனர். அங்குள்ள செங்குந்த அன்பர்கள் அவர்களை மிக்க உற்சாகத்தோடு வரவேற்றனர். பிறகு செங்குந்தர்சங்கம் ஸ்தாபிக்கவேண்டிய விஷயத்தைக் குறித்து யோசித்ததில், அவ்வூரில் சமீபத்தில் நடக்கப்போகும் உற்சவம் முடிவுற்றதும் ஸ்தாபிக்க முயல்வதாகக் கூறினர்.

8-5-28-ந்தேதி மாலை பிரசாரகர்களும் குருஸ்வாமிகள் ஸ்ரீலஸ்ரீ சிவஸ்வாமி தேசிகர் அவர்களும் ஸ்ரீமத் இரத்தினசபாபதி தேசிகர் அவர்களும் புறப்பட்டுத் திருப்பாதிரிப்புலியூரை அடைந்து ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடத்தில் தங்கியிருந்தனர் மறுநாள் பழைய வண்டிப்பாளையம் அடைந்தனர்.

#### புதுவண்டிப்பாளையம்.

ஸ்ரீ சிவஸ்வாமி தேசிகரும் பிரசாரகர்களும் 9-ந்தேதி மாலை 4 மணிக்குப் புது வண்டிப்பாளையம் சென்றனர். அங்கு பல செங்குந்தர்கள் திரண்டு அனைவரையும் வரவேற்று வேண்டிய உபசாரம் புரிந்தனர். அன்று இரவு 9-மணிக்கு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் ஆலயத்தில் ஒரு செங்குந்தர் பொதுக்கூட்டம் கூடியது. கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ சிவஸ்வாமி தேசிகரவர்கள் தலைமை வகிக்க திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் 'செங்குந்தர் முன்னேற்றம்' என்பது குறித்தும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'சமூக சேவையும் சங்கமும்' என்பது குறித்தும் உபந்யசித்தனர்.

#### முருகேசநகர்.

11-5-28-ந்தேதி இரவு 6-மணிக்கு முருகேச நகர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியார் ஆலயத்தில் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. கூட்டத்திற்கு ஸ்ரீமத் சிவஸ்வாமி தேசிகர் தலைமை வகித்தனர். பின்பு தி. அ. சண்முக முதலியார் 'செங்குந்தர் சீர்திருத்தம்' என்பதுபற்றியும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் 'தலைச்சங்கத்தின் நோக்கங்கள்' என்பதுபற்றியும் உபந்யசித்தனர். பின்பு 'முருகேச நகர் செங்குந்தர் சங்கம்' என்றபெயரோடு ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு வருடம் ஒன்றுக்கு 15 ரூபாய் தலைச்சங்கத்திற்குச் செலுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. கீழ்க்கண்டவர்கள் நிர்வாக அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் தலைவர்—வெ. க. மா. ஆறுமுக முதலியார், காரியதரிசிகள்—ப. க. தண்டபாணி முதலியார், க. சோமசுந்தர முதலியார், பொக்கிஷதார்—ச. மாணிக்க முதலியார். இதுவன்றி 15 நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

11-5-28-ந்தேதி இரவு 3 மணி வண்டிக்குப் பிரசாரகர்கள் புறப்பட்டு மறுநாட்காலை திருவாரூரை யடைந்தனர்.



(இன்னும் வரும்)

---

### பழநியில் பிரசாரம்.

தலைச்சங்கத்தின் அமைச்சரும் நமது மித்திரன் ஆசிரியருமாகிய திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்களுடன் பாண்டிய நாட்டிற்குப் பிரசாரத்தின் பொருட்டுச் சென்ற திரு மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் சென்ற ஜூலை 2௳ மதுரையிலிருந்து பழநிக்குப் புறப்பட்டுச் சென்று பழநி அடிவாரத்திலுள்ள முதலிமார் மடத்தில் தங்கியிருந்து அவ்வூரிலுள்ள பல செங்குந்த பிரமுகர்களைக் கண்டு மித்திரனுக்குச் சந்தா நேயர்களைச் சேர்த்துக்கொண்டு 4-7-28 காலை அம்மடத்திலிருக்கும் திரு. முத்துரங்கமுதலியார் அவர்களுடன் ஆய்க்குடிக்குச் சென்றனர் அவ்வூர் குலாபிமானிகள் நமது சங்கப்பிரதிநிதியை மிகுந்த அன்புடன் வரவேற்றுபசரித்தனர். அன்றிரவு 7-மணிக்குத் திரு. சரவண முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று அச்சமயம் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் "நம் முன்னேற்றமடையும் வழி" என்பதுபற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர் கூட்டத்திற்குச் சுமார் 40 கனவான்களே வந்திருந்தார்களாயினும் தலைச்சங்கம் செய்துவரும் குலத்தொண்டைப் பற்றியும் நங்குல முன்னேற்றத்திற்காக மேற்கொண்டுள்ள முறைகளையும் கேட்கக் கேட்கச் சங்க விஷயத்தில் அவர்களுக்கு மிகுந்த ஊக்கமும் உற்சாகமும் உண்டாயின. கடைசியில்

(1) குல முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் தலைச் சங்கத்தோடு செங்குந்தரனைவரும் ஒத்துழைப்பது அவசியமென்றும், பழநியிலும் அதைச் சூழ்ந்த கிராமங்களிலும் வசியும் செங்குந்தர் அனைவரும் பழநி அடிவாரத்திலுள்ள முதலிமார் மடத்தில் கூடிக் கிளைச்சங்கம் நிறுவுதல் முதலிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தனர்.

(2) இத் தீர்மானம் நிறைவேறும் பொருட்டு பிரபல வியாபாரியும், சிறந்த குலாபிமானியும் தரும சிந்தையுடையவருமாகிய வேலாயுதம்பாளையம்புதூர் திரு. K. V. இராமசாமி முதலியார், பழநி பாத்திரக்கடை திரு. குழந்தைவேலு முதலியார் முதலிய பிரமுகர்களைக் கண்டு தக்க ஏற்பாடு செய்யுமாறு நமது சங்கப்பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டனர். இரவு $10\frac{1}{2}$-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

மறுநாட்காலை நமது சங்கப்பிரதிநிதி திரு. முத்துரங்க முதலியார் அவர்களுடன் வேலாயுதம் பாளையம் புதூருக்குச்சென்று திருவாளர்கள் K. V. இராமசாமி முதலியார், பச்சையப்ப முதலியார், வேலு முதலியார், முதலிய பல குலாபிமானிகளைக் கண்டு பேசினர். திரு. K. V. இராமசாமி முதலியார் அவர்கள் சென்ற இரண்டொருமாதங்களாகக் கிளைச்சங்கம் ஒன்று நிறுவயோசிப்பதாகவும் கூடிய சீக்கிரம் அதை நிறைவேற்றுவிக்க வேண்டிய ஏற்பாடு செய்வதாகவும் வாக்களித்தனர். அன்னார் குலப்பற்றும், பெருந்தன்மையும், தரும சிந்தையும், பாராட்டத்தக்கன. முதலியார் அவர்கள் சிறிது இவ்விஷயத்தில் முயல்வாராயின் பழநியிலும் அதைச் சூழ்ந்த கிராமங்களிலும் பலமான கிளைச்சங்கங்கள் நிறுவப்பெறுமென நம்பப்படுகிறது.

6-7-28 நமது பிரதிநிதி பழநிக்குத் திரும்பிவந்து நமது கிளர்ச்சியில் பேருக்கங் கொண்டுள்ள திரு. முத்துலிங்க முதலியாருடன் சென்று பழநிப்பதியில் செங்குந்த முதலிமார்களால் பரிபாலிக்கப்பெற்று வரும் பல தர்மங்களையும் பார்வையிட்டனர். இத் தர்மங்களைப்பற்றியும் அவற்றின் தற்கால நிலைமையைப் பற்றியும் தனியே ஒரு வியாசம் நமது மித்திரனில் தோன்றும். ஜூலை௴ 7௳ காலை பழநியிலிருந்து திரு. மா. அ. கனகசபை முதலியார் புறப்பட்டு மாலை $8\frac{1}{2}$-மணிக்குத் திருநாகேஸ்வரம் வந்து சேர்ந்தனர். ரெயில்வே ஸ்டேஷனில் திரு ஆ. மு. சோமசுந்தர முதலியார், திரு. கொ. க. வேதாந்த முதலியார் முதலிய பிரமுகர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்றனர்.

### தஞ்சை ஜில்லாவில் பிரசாரம்.

சங்கப்பிரதிநிதிகள் தஞ்சை ஜில்லாவில் செய்த பிரசாரத்திற்குப் பலவகையிலும் திருவாளர்கள் ஆ. மு. சோமசுந்தர முதலியார் அவர்களும், வேதாந்த

முதலியார் அவர்களும் செய்த உதவி என்றும் மறக்கற்பாலதன்று.

9-7-28 காலை திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் ஆ. மு. சோமசுந்தர முதலியார் அவர்களுடன் மாயவரம் சென்று நமது குல தீபங்களுள் ஒன்றாய் விளங்கும் திரு. V. இரத்தின முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்களால் உபசரிக்கப்பெற்றுத் தஞ்சை ஜில்லாவில் பிரசாரம் செய்யும் பொருட்டு அங்கு வந்திருந்த திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார் ஆகிய இருவரையும் சந்தித்து அவர்களுடன் அன்று பகல் திருவாரூருக்குச் சென்று நமது கிளர்ச்சிக்குத் தந்தையாகிய திரு. கலியாணசுந்தர முதலியார் அவர்களையும், அவரது சகோதரரும் தலைச்சங்க அமைச்சருள் ஒருவருமாகிய திரு. கி. கா. சபாபதி முதலியார் அவர்களையும், தலைச்சங்கப் பொக்கிஷதாராகிய திரு. S. முருகைய முதலியார் அவர்களையும் கண்டு அன்னோர் உத்திரவின்படி திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் திருவாரூரைச் சூழ்ந்த கிராமங்களிலும், திரு. தி. அ. சண்முக முதலியார் மாயவரத்தைச் சூழ்ந்த இடங்களிலும் திரு. மா. அ. கனகசபை முதலியார் திருநாகேஸ்வரம், சுந்தரப்பெருமாள் கோவிலைச் சூழ்ந்த இடங்களிலும் பிரசாரம் செய்ய 10-7-28 திருவாரூரை விட்டுப் புறப்பட்டனர்.

### கூரைநாடு.

6-7-28 இரவு 9½-மணிக்குத் தலைச்சங்கத்துப் பிரசாரகர்கள் திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் தி. அ. சண்முக முதலியார் அவர்களும் சென்னையினின்று புறப்பட்டு மறுநாட்காலை 6-மணிக்குக் கூரைநாடு சேர்ந்து திருவாளர்கள் சி. த. அ. வீரப்ப முதலியார் அவர்களாலும், V. இரத்தின முதலியார், பி.ஏ., பி.எல். அவர்களாலும் வரவேற்று உபசரிக்கப்பெற்று, இரவு 7 மணிக்குச் சுப்பிரமணிய சுவாமி சந்நிதியில் திரு. சி. த. அ. வீரப்ப முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில், "செங்குந்தர் முன்னேற்றம்," "சங்கம், பத்திரிகை" என்னும் விஷயங்களைப்பற்றி முறையே திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியாரும், பி. செ. மாணிக்கவாசக முதலியாரும் உபந்யசித்தார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது நிறைவேறியது. மறுநாள் திருவாளர்கள் அப்புலிங்க முதலியாரும், V. இரத்தினமுதலியாரும் (பி.ஏ., பி.எல்.), பாவாடை முதலியாரும், முத்தைய முதலியாரும், பிரதிநிதிகளுடன் அவ்வூரில் மித்திரனுக்குச் சந்தா சேர்த்தல் முதலிய காரியங்களில் உதவிபுரிந்தார்கள். இவர்கள் செய்த குலத்தொண்டு மிகவும் போற்றத் தகுந்தது.

### திருவாரூர்.

9-7-28 காலை நமது தலைச்சங்கத்து உதவிப் பொருட்காப்பாளர் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும், திருநாகேஸ்வரம் திரு. ஆ. மு. சோமசுந்தர முதலியார் அவர்களும் கூரைநாட்டுக்கு வந்து நமது பிரசாரகர்களுடன் கூடித் திருவாரூருக்குப் போய்த் தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க அமைச்சராகிய திருவாளர் தி. கா. சபாபதி முதலியார் அவர்களைக் கண்டு திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் திருவாரூர் முதலிய விடங்களுக்கும் திரு. மா அ. கனகசபை முதலியார் அவர்கள் திருநாகேச்வரத்தைச் சுற்றியுள்ள இடங்களுக்கும் திரு. தி. அ சண்முக முதலியார் மாயவரத்தைச் சுற்றியுள்ள இடங்களுக்கும் பிரசாரஞ் செய்யும்படி ஏற்பாடு செய்யப்பட்ட, 10-7-28 பிற்பகல் 4-மணிக்குப் புறப்பட்டுத் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் மாயவரங் கூரைநாட்டிற்கு வந்து சேர்ந்தார்.

### செம்மனூர் கோயில் திருச்செம்பள்ளி.

ஜூலை௴ 11, 14 தேதிகளில் V. இரத்தின முதலியார் அவர்களும் பிரசாரகர் தி. அ. சண்முக முதலியார் அவர்களும் செம்மனூர் கோயிலுக்குச் சென்று அவ்விடத்துள்ள பல செங்குந்த பிரமுகர்களைக் கண்டு சங்கம் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்துவிட்டுத் திருச்செம்பள்ளிக்குப்போய் அங்குள்ள பல செங்குந்த பிரமுகர்களைக்கண்டு பேசிக் கூரைநாட்டுக்குத் திரும்பிவந்தனர். ஆங்கு திரு. சொ. ஆ. பக்கிரி முதலியார் அவர்களும், திரு. ம. ச. அருணாசல முதலியார் அவர்களும், திரு. தில்லைக்கண்ணு முதலியார் அவர்களும் நமது பிரசாரகருக்குச் செய்த உதவி என்றும் போற்றத் தக்கதாகும்.

### தில்லையாடி, காட்டுச்சேரி.

12-7-28 காலை 9-மணிக்குப் பிரசாரகர் தி. அ சண்முக முதலியாரும், கூரைநாடு திரு. சி. மு. நடேச முதலியாரும் பகல் 11-மணிக்குத் தில்லையாடிக்குச் சென்று திரு. கா. மு. வடிவேல் முதலியாரால் வரவேற்று உபசரிக்கப்பெற்று "செங்குந்த மித்திர" னுக்குச் சில



சந்தாதாரர்களைச் சேகரித்துக்கொண்டு மாலை 5-மணிக்குக் காட்டுச் சேரிக்குப் போய் திரு. S. அமுர்தலிங்க முதலியாரவர்களாலும், திரு. ஆ. வரதராஜ முதலியார் அவர்களாலும் உபசரிக்கப்பெற்று அவ்விடத்தில் கிளைச்சங்கம் நிறுவுவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்துவிட்டு 14 7-28 காலை 10 மணிக்குக் கூரைநாட்டைச் சேர்ந்தார்கள்.

### திருநாகேஸ்வரம்.

16 7-28 காலை 5 மணிக்குப் பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியார் திருநாகேஸ்வரம் வந்து திரு. மா அ. கனகசபை முதலியாருடன் கலந்து கொண்டனர்.

### சுந்தரப் பெருமாள் கோவில்.

17-7-28 காலை 6 மணிக்குப் பிரசாரகர்கள் திரு மா. அ. கனகசபை முதலியாரும், திரு. தி. அ. சண்முக முதலியாரும் திருநாகேஸ்வரத்தினின்றும் புறப்பட்டுச் சுந்தரப்பெருமாள் கோவிலை யடைந்து அவ்விடத்துள்ள நாட்டாண்மை. திரு. ச. ஆறுமுக முதலியார் அவர்களையும், நாட்டாண்மை திரு. கோவிந்தசாமி முதலியார் அவர்களையும், திரு. சபாபதி முதலியார் அவர்களையும் கண்டு சீர்திருத்த விஷயமாகப் பேசினர் அன்றிரவு 7-மணிக்குச் செங்குந்தர் பொதுக்கூட்டம் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் திரு. தி. அ சண்முக முதலியார் "செங்குந்தர் சீர்திருத்தம்" என்பதைப்பற்றி 2 மணி நேரம் கேட்போர் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியும்படி உபந்யசித்தார். கூடிய சீக்கிரத்தில் கிளைச் சங்கம் நிறுவத் தீர்மானம் செய்யப்பெற்றது தலைவர் முடிவுரைக்குப் பின்னர் செங்குந்த மித்திரனுக்கு 18 சந்தாதாரர் சேர்ந்தார்கள்.

### நெடுந்தெரு

18 7-28 காலை 7 மணிக்குச் சுந்தரப்பெருமாள் கோவிலினின்றும் பிரசாரகர்கள் புறப்பட்டுத் திரு ஆ ப. அருணாசல முதலியாருடன் திருப்பாலைத்துறை, வெங்காரம்பேட்டை முதலிய விடங்களிற் மித்திரனுக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொண்டு மாலை5மணிக்கு நெடுந்தெருவை யடைந்தனர். அவ்வூர் நாட்டாண்மை. திரு. ரெ. வெங்கடாசல முதலியார் அவர்கள் முயற்சியால் அன்றிரவு 9மணிக்குச் செங்குந்தர் கூட்டம் ஒன்று கூடியது. அது சமயம் தி. அ. சண்முக முதலியார் "செங்குந்தர் செய்யவேண்டிய வேலை" என்பதைப் பற்றி உபந்யாசம் செய்தனர். சிலர் மித்திரனுக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்தனர்.

### உள்ளிக்கடை

19.7.28 காலை 7 மணிக்கு நாட்டாண்மை. திரு. ரெ. வெங்கடாசல முதலியாருடன் பிரசாரகர்கள் உள்ளிக்கடை யென்னும்கிராமத்தை யடைந்து திரு. வா. சத்திவேல் முதலியார் அவர்களால் உபசரிக்கப்பெற்று இரவு 7 மணிக்குக் காரியக்காரர் திரு. வையாபுரி முதலியார் வீட்டில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டினர். அவ்வூர் பிரபலவயித்தியரும் நாட்டாண்மைக்காரருமாகிய திரு. கந்தசாமி முதலியார் தலைமை வகிக்க, தி. அ. சண்முக முதலியார் "செங்குந்தர் கடமை" என்பது பற்றியும் மா. அ. கனகசபைமுதலியார் "பத்திரிகையால் விளையும் பயன்" என்பதைப் பற்றியும் மிகத் தெளிவாக உபந்யாசம் செய்தார்கள். மித்திரனுக்குச் சிலர் சந்தா நேயர்களாகச் சேர்ந்தனர். சுந்தரப்பெருமாள் கோவில் திரு. அ. ப. அருணாசல முதலியாரும், நெடுந்தெரு திரு. ரெ. வெங்கடாசல முதலியாரும் பிரசாரகருடனிருந்து செய்த குலத்தொண்டு பாராட்டற்பாலது.

### திருநாகேஸ்வரம்

21-7-28 காலையில் பிரசாரகர்கள் உள்ளிக்கடையினின்று புறப்பட்டு 22-7-28 திருநாகேஸ்வரம் வந்துசேர்ந்தனர். அன்று மாலை 5 மணிக்குத் திருநாகேஸ்வரம் சன்மார்க்க சங்கத்தின் சார்பாக திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் தலைமைவகிக்க, திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் "சங்கமும் பயனும்" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யாசம் செய்தார். தலைவர் "திருவள்ளுவரும் திருக்குறளும்" என்னும் விஷயத்தை விளக்கிக் கூறினர். இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது,

### கொடவாசல்

24-7-28 காலை பிரசாரகர்கள் கொடவாசல் கிராமத்திற்குச் சென்று அவ்விடத்துள்ள குலாபிமானிகளாகிய திருவாளர்கள். கெ.சா.க. உத்தராபதி முதலியார், இரத்தினசபாபதி முதலியார், இராமகிருஷ்ண முதலியார், கந்தசாமி முதலியார் முதலியவர்களைக் கண்டு பேசியபின் அவர்களால் உபசரிக்கப் பெற்று, இரவு 7 மணிக்குச் சைவசமய பரிபாலன பதஜன சபாமண்டபத்தில் கொடவாசல் செங்குந்

மகாஜன சங்கத்தின் ஆதரவில் செங்குந்த பொதுக்கூட்டம் ஒன்று கூட்டினர். அதுசமயம் தி. அ. சண்முக முதலியார் "செங்குந்தர் இனிச்செய்யவேண்டிய வேலை" என்பதைப் பற்றியும் மா. .. கனகசபை முதலியார் "சங்கத்தின் ... என்பதைப் பற்றியும், உபந்யாசம் செய்... செங்குந்த மித்திரனுக்குப் புதிதாக 12 பே... சந்தாதாரராகச் சேர்ந்தனர். மறுநாள் இரவு 7 மணிக்கு ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் ஷை சங்கத்தின் ஆதரவில் தி. அ. சண்முக முதலியாரால் உபந்யசிக்கப்பெற்றது.

### வலங்கைமான்

26-7-28 காலை 8-மணிக்குக் கொடவாசலிலிருந்து பிரசாரகர்கள் புறப்பட்டுப் பகல் 1 மணிக்கு வலங்கைமானை யடைந்தனர். அவ்விடத்துள்ள குலாபிமானிகளாகிய நாட்டாண்மைக்காரர் திரு. ரெ. பாலகிருஷ்ண முதலியார், திரு. ஆ. அ. ச. குப்புசாமி முதலியார், திரு மா. வெ. வேலாயுத முதலியார், திரு. ம. கு. நா. வீரப்ப முதலியார், திரு சீ. சு. முருகைய முதலியார் முதலியவர்களால் உபசரிக்கப்பட, அன்றிரவு 8-மணிக்கு இராம மடத்தில் செங்குந்தர் பொதுக்கூட்டம் கூடியது. திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்"தைப்பற்றித் தெளிவாக எடுத்துரைத்தார். திரு சி. சு. முருகைய முதலியார் அவர்கள் செய்த அருங் குலத்தொண்டால் மித்திரனுக்குப் புதிதாக பத்து சந்தாதாரர் சேர்ந்தனர். 27-7-28 இரவு 8-மணிக்கு தி. அ. சண்முக முதலியாரால் அவ்வூர் செங்குந்தர் திருவாசலில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் உபந்யாசம் செய்யப்பட்டது. மறுநாட் காலையில் பிரசாரகர்கள் அவ்வூரிலிருந்து பகல் 11-மணிக்குத் திருநாகேஸ்வரம் வந்து சேர்ந்தார்கள்.

### திருபுவனம்.

31-7-28 காலை 9 மணிக்குப் பிரசாரகர்கள் திருபுவனம் சென்று பல செங்குந்த பிரமுகர்களைக் கண்டு மித்திரனுக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொண்டு அம்பாசமுத்திரம் வந்து சில செங்குந்த பிரமுகர்களைப் பார்த்துக்கொண்டு திருநாகேஸ்வரம் வந்து சேர்ந்தார்கள்.

### நாங்கூர்

5-8-28 காலை பிரசாரகர்கள் திருநாகேஸ்வரத்தினின்றும் புறப்பட்டுக் கூரைநாட்டிற்கு வந்து திரு. V. இரத்தின முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்களுடன் 6-8-28ல் நாங்கூருக்குப் போய் நாட்டாண்மைக்காரர்கள் திரு. சி. நாகலிங்க முதலியார் அவர்களாலும் திரு. வீரப்பமுதலியார் அவர்களாலும் திரு. கோவிந்த முதலியார் அவர்களாலும் உபசரிக்கப்பெற்று அன்றிரவு 6-மணிக்குத் திரு கோவிந்த முதலியார் அவர்கள் வீட்டில் V. இரத்தின முதலியார் பி.ஏ., பி.எல், அவர்கள் தலைமையில் திரு தி. அ. சண்முக முதலியார் அவர்கள் "செங்குந்தர் முன்னேற்றம்" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யசித்தனர். புதிதாகச் செங்குந்த மித்திரனுக்கு 24 சந்தாதாரர் சேர்ந்தனர். கிளைச்சங்கம் கூடியவிரைவில் ஏற்படுத்த வேண்டிய முயற்சிகள் செய்து வருகிறார்கள்.

### சீர்காழி

7-8-28 சீர்காழியை யடைந்து முனிசிபல் கவுன்சிலர் திரு. க. து. வீரசங்காரவேலு முதலியார் அவர்களால் உபசரிக்கப் பெற்று மித்திரனுக்குப் புதிதாக சில சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொண்டு வந்தார்கள். மாணவர் ஆ சம்பந்த முதலியார் பிரசாரகர்களுக்குச் செய்த ஒத்தாசை பாராட்டத்தக்கது.

### சிதம்பரம்

8-8-28 மாலையில் சிதம்பரத்தை யடைந்து காலை சந்திக்கட்டளை முதலியார் அவர்களால் உபசரிக்கப் பெற்று அங்குள்ள செங்குந்தகுல சீமான்களை நேரிற் கண்டு நம் குலசம்பந்தமாய்ச் சில விஷயங்களை யோசித்து கிளைச்சங்கம் கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்துதற்கு வேண்டிய வேலை செய்துவிட்டு சென்னைக்கு வந்தனர்.

நமது பிரசாரகர்கள் சென்ற ஒவ்வோரிடத்திலும் அவர்களுடனிருந்து பலவிதத்திலும் உதவிபுரிந்த பல செங்குந்த சகோதரர்களுக்கும் நமது தலைச்சங்கம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

### மஞ்சட்கொல்லை.

நானது விபவஹு ஆடி மீ 5உ (20-7-28) நமது தலைச்சங்கப் பிரசாரகருள் ஒருவரான காஞ்சிபுரம் ஸ்ரீமான் மாணிக்கவாசக முதலியார் அவர்கள் காரைக்கால் திருமலைராஜன் பட்டணத்திலிருந்து இங்கு வந்தனர். இவ்வூர் திருஞானசம்பந்தர் மடாலயத்தில் ஞானப்பிரகாசர்பரம்பரை இலக்கண விளக்கம்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ மு. சுவாமிநாத தேசிகர் அவர்களின் தலைமையின்கீழ் இரவு 7½-மணிக்கு இவ்வூர் செங்குந்த பிரமுகர்களின் கூட்டம் நடைபெற்றது. பண்டிதர் அவர்களின் முகவுரைப் பிரசங்கத்தில் பிரசாரகர் அவர்களைப்பற்றி சிறிது பேசிய பிறகு ஸ்ரீமான்



மாணிக்கவாசக முதலியார் அவர்கள் நமது குல பண்டைப்பெருமைகளையும், அந்த இக்காலம் அடைந்துள்ள இழிநிலையையும் எடுத்து விளக்கி அப்பெருமையைமட்டும் பேசிக்கொண்டு வாளாயிருப்பதில் பயனில்லை யாதலால், நாம் ஒன்றே அதிலும் இன்னே நித்திரை தெளிந்தெழுந்து பற்பல சங்கங்களைத் தோற்றுவித்துத் தீவிர முயற்சிசெய்தல் அவசியமென்றும் சங்கத்தால் நாடார் சமூகம் அடைந்துள்ள அரும்பெரும் நன்மைகளைப்பற்றியும், அவர்கள் அண்மையிலே அருப்புக்கோட்டையில் மகாநாடு கூட்டியதையும் அவர்கள் ஆதிக்கத்தில் ஆரம்ப பள்ளிக்கூடங்கள் 100-க்கு மேலும் உயர்தர பள்ளிக்கூடங்கள் 6-ம் உள்ளன என்றும் அதிலும் விருதுநகரிலுள்ள உயர்தர பாடசாலை கல்லூரியாக மாற விருக்கின்றதென்றும், சௌந்தர பாண்டிய நாடார் அவர்கள் நாடார் சமூக சார்பாக சட்டசபையில் பிரதிநிதித்வம் பெற்றாரென்றும், இவ்வளவும் அவர்களது சங்கத்தால் ஏற்பட்டனவே என்றும், ஆதலால், நாமும் சங்கங்கள் கூடி நமது குறைகளை அவ்வப்போது அரசாங்கத்தாருக்கு அறிவித்து நீக்கிக்கொள்ள வேண்டுமென்றும், நமது பிரதிநிதியும் சட்டசபைக்குள் இருக்கவேண்டுமென்றும் நமது குறையை பிறர் உதவியை எதிர்பாராது நாமே நிவர்த்தித்துக்கொள்ள வேண்டுமென்றும் அரசாங்கத்தையே நம்பியிருத்தலில் பயனில்லை யென்றும் கேட்பாரைப் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப மொழிந்த அவர் தம் மணிவாசகமாகிய இன்பத்தேனைச் சபையோர் செவிகொண்டு அறிவுக் களஞ்சியம் நிறையமாந்தி இன்புற்றிருந்தனர். பின்னும் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் நமதுசமூகம் கல்வியால் சீர்கேடடைந்துள்ளதாதலால் முதலாவதாக சீர்திருத்தம் பெற வேண்டியது கல்வியிலேயே என்றும் அதற்கு அவ்வவ்விடங்களில் தகுந்த ஏற்பாடு செய்வதோடு தலைநகராகிய சென்னையிலே ஒரு மாணவர் விடுதி நிறுவுதல் அத்தியாவசியமென்றும், தொழிற் கல்வியும், கற்பிக்கப் பெறவேண்டுமென்றும், பழைய மாதிரியே செய்துகொண்டு போகாமல் நவநவமானமாதிரியில் நெசவுத் தொழிலை விருத்தி செய்ய வேண்டுமென்றும், பம்பாய், சென்னை முதலிய இடங்களிலுள்ள அரசாங்க நெசவுச்சாலைகளில் பலர் சென்று தேறிவந்து தொழிலைப் புதுப்பிக்க வேண்டுமென்றும், வைதிக லௌகீகத்திற்கேற்ற தமிழ் ஆங்கிலம், கற்பிக்கப்படுவதோடு தொழிற் கல்வியும் போதிக்கப்பட வேண்டுமென்றும், பிறவும் கேட்டார் மனத்து பசுமரத்தாணி போற் பதிந்து உற்சாக மூட்ட வல்லவகையில் பேசினார்கள்.

பின்பு ம. வீரபத்திர முதலியார் அவர்கள் நமது சபைகளில் காங்கிரஸ் ஜஸ்டிஸ் முதலிய ராஜீய கட்சிகளின் சார்பாக யாதொரு சொல்லும் செயலும் அறவே கூடாதென்றும் அவை தனிப்பட்ட முறையில் (நமது சமூக சங்கச் சார்பாகவன்றி) செய்து கொள்ளலாமென்றும், அவ்வாறு தனிப்பட்டமுறையில் ராஜீயத்தில் ஒருவர் எக்கட்சிக் கொள்கை யுடையாரேனும் அவர் நமது சமூக முன்னேற்றம், சங்கம் என்ற விடத்து ஒற்றுமையாய் வேலை செய்ய வேண்டும் என்றும் கூறினர்.

அதை முற்றிலும் ஆதரித்துப்பிரசாரகர் பின்னரும் பேசியபின் இச்சபை நமது தலைச்சங்கத்தின் உபதலைவரும், இவ்வூர் பிரபல செல்வந்தரும், வியாபாரியும், மிராசுதாரரும் ஆகிய ஸ்ரீமான் அரு சி. தியாகராஜ முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்டதாகப் புதுப்பிக்கப்பட்டது. இதற்கு 11 பேர் நிர்வாக சபை அங்கத்தினர்கள் உள்ளனர். பிரதி பௌர்ணமிதோறும் கூட்டம் நடத்துவதென்றும், தலைச்சங்கத்துக்குப் பிரதி வருஷம் ரூ. 10 (பத்து) கட்டணம் செலுத்துவதென்றும், தீர்மானிக்கப்பெற்றது. பின்னர் நமது பிரசாரகர் போன்ற வாலிபர்களின் முயற்சியே தற்போது செங்குந்த உலகத்துக்கு அவசியமாதலால் அவர்களும் பிற வாலிபர்களும் ஊக்கத்தோடுழைக்கவும் நமது பிரசாரகர் திடதேகமும் நீண்ட ஆயுளும் பெற்றுத் தொண்டு செய்யவும் அருளுமாறு குகப்பெருமானை வழுத்தியபின்னர் கூட்டம் இனிது முடிவுற்றது.

இரண்டொரு பிரபலஸ்தர் வெளியூர்களுக்குச் சென்றிருந்தும் கூட்டம் வெகு விமரிசையாய் நடந்தேறியது.

பின்னர் ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஆராதனையோடு சபை கலைந்தது. நாளை காலையில் ஆடிப்பூரமானதால் இங்கு தங்கி மறுநாள் சிக்கல் பொருள் வைத்தச்சேரி பிரசாரத்திற்கு ஸ்ரீமான் முதலியார் அவர்கள் செல்கின்றனர்.

ரா. பீ. ராஜகோபால் முதலியார்,
கூட்டக் காரியதரிசி.

### திருமருகல்.

செங்குந்த குலாபிமான சங்கத்தார் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கௌரவ பிரசாரகராகிய திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 10-7-28இல் வர, அவர்களை வரவேற்று மருநாள் மாலை 7-மணிக்கு ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி கோவில் சந்நிதியில் இவ்வூர் பிரபல தனவந்தரும் ஸ்ரீ ஷண்முகசுந்தர ...

மார்க்க சங்கத்தின் தலைவருமாகிய ஸ்ரீமான் க. ரா. ம. லக்ஷ்மண முதலியார் அவர்களின் தலைமையின்கீழ்ச் செங்குந்த குலமக்களின் கூட்டமொன்று கூட்டுவித்தனர். சபை ஆரம்பத்தில் சி. தி. தாண்டவராய முதலியார் அவர்கள் திரு. மாணிக்கவாசக முதலியார் அவர்களைச் சபையோர்களுக்கு அறிமுகப்படுத்தி அன்னாரின் குலத்தொண்டின் பெருமையையும் குலாபிமானத்தின் மிகுதியையும் வியந்து கூறினார். பின்னர் அக்கிராசனர் முகவுரைப் பிரசங்கம் நிகழ்த்தியபின், நீண்ட கரகோஷத்தினிடையே திரு. முதலியார் அவர்கள் எழுந்து "குலமுன்னேற்றம்" என்பதுபற்றி கடல் மடைதிறந்தாற்போல் 2 மணி நேரம் செங்குந்த குலமக்களின் கல்மனத்தையும் கரைக்கும்படி அமிர்த சொற்பொழிவு நிகழ்த்தினார். இரண்டாவதாக, போர்டு ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் திரு. S. சுப்பிரமண்ய முதலியார் அவர்கள் கல்வி என்பதுபற்றி சிறிது நேரம் உபந்நியசித்தார். பின்னர் அக்கிராசனர் முடிவுரை கூற ஸ்ரீமான் சி. க. த. முத்துவேல் முதலியார் அவர்களால் தலைவருக்கும் உபந்நியாசகர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டபின் சபை இரவு மணி 10-க்கு இனிது நிறைவேறியது.

சி. தி. தாண்டவராயன்

## செங்கல்பட்டு ஜில்லாவில் கிளர்ச்சி.

### ஜமீன் பெரியகயப்பாக்கம் செங்குந்தர் சங்கம்.

16-7-28 இரவு 7-மணிக்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் திரு. சந்தி. ஆ. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று கூடிற்று. அச்சமயம் உபதலைவர் திரு. வி. க. அண்ணாமலை முதலியார் கடவுள் வாழ்த்து செய்து சண்டேஸ்வர நாயனார் சரித்திரத்தை உபந்யசித்தனர். தலைவர் பின்னுரையின்பின் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் 9-மணிக்கு இனிது கலைந்தது.

24-7-28 இரவு 7-மணிக்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று சங்கத்தலைவர் உத்திரவின்படி உபதலைவர் திரு. V. S. அண்ணாமலை முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. அப்போது திரு. வி. எல்லப்ப முதலியார் நமது குலவரலாற்றைப் பற்றி அரிய பெரிய விஷயங்களுடன் உபந்நியாசம் செய்தார். பின்னர் சங்கக் காரியதரிசி திரு. நடேச முதலியார் அவர்களுக்குள்ள தேக அசௌக்கியத்தை முன்னிட்டு அவர் சம்மதத்தின் பேரில் காரியதரிசி உத்தியோகம் திரு. V. S. அண்ணாமலை முதலியார் அவர்களுக்கு மாற்றப்பட்டது. இரவு 9½-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

V. S. நடேச முதலியார்,
காரியதரிசி

### தேவாதூர் செங்குந்த மஹாஜனசங்கம்.

16-7-28 அமாவாசையன்று பகல் 3-மணிக்குக் கோட்டுதேவாதூரில் செங்குந்த பஜனைக்கூடத்தில் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டம் மேற்படி சங்கத்தின் அங்கத்தினரில் ஒருவராகிய திருவாளர் கு. வேதகிரி முதலியாரால் சேர்க்கப்பட்டது. அக்கூட்டத்தில் தலைவர் திரு. பொ. தர்மலிங்க முதலியாரும் அ. செல்லப்ப முதலியாரும் தலைமை வகித்தனர். அதுபோழ்து சங்கத்திலுள்ள யாவரிடமும் மாதச் சந்தா 0-1-0 வீதம் வசூல் செய்யப்பட்டது. பிறகு காரியதரிசி திரு மு. செல்லப்ப முதலியாரால் பஜனை பாடப்பெற்றது. தலைவர் திரு. சு. பொ. தருமலிங்க முதலியாரால் ஜீவகாருண்யத்தைப் பற்றி வெகு நேரம் உபந்நியசிக்கப்பட்டது. பிறகு யாவரும் 15-8-28-ல் கூட்டம் சேரவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டு மேற்படி கூட்டம் இனிது முடிந்தது.

15-8-28-ல் மேற்படி கூட்டம் சேர்ந்ததில் மேற்படி தேவதாரிலுள்ள செங்குந்தகுலத் திருவாளராயும் ஸ்ரீ சேயூர் கந்தஸ்வாமியார் தேவஸ்தான தர்மகைங்கரியம் நாடோறும் இடைவிடாது நடத்தபவராயும் விளங்கும் சைவத் திருவாளர் சுப்பராய முதலியார் குமாரர் வேதாசல முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் யாவரும் ஒன்றாய்க் குழுமிச் சங்கத்தைக் காலக்ஷேபம் செய்துகொண்டும் மற்றும் இச்சங்கத்தின் அங்கத்தினராயுள்ள சிலரால் சேரிக்கும் வழக்குகளைப் பரிசீலித்துக் கொண்டும் வெகு நேரம்வரையில் சம்பாஷணை நடாத்தி வாழ்த்திருந்த பிறகு நமது மித்திரனுக்கு அனுப்பவேண்டிய கட்டணம் ரூபா 3-0-0, நம கிராமத்திற்குத் தலைவர் தி. தருமலிங்க முதலியார் பெயருக்குவரும் பத்திரிகை 1-க்கு ரூ. 1-8-0 ஆக ரூ. 4-8-0 அடுத்த மாதத்தில் மணியார்டர் செய்வதாய் கிராமவாசிகளாகிய திருவாளர்களனைவரும் தீர்மானித்து யாவரும் நன்மனதுடன் இச்சங்கம் நெடுநாள் வரை நீடுழிவாழ்கவென்று நம முழுமுதற் கடவுளாகவும் நமது சோதரராகவும் விளங்கும் நவவீரர் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுளை உள்ளன்புடன் தியானித்துக் கூட்டம் கலைவிடப்பட்டது.

தி. தே. சு. பொ. தருமலிங்க முதலியார்,
செங்குந்த மகாஜன சங்கத்தலைவர்.



### கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம்.

13-8-28 மாலை 8-மணிக்கு விசாலாக்ஷி விலாசத்தில் திரு. ப. சு. தீர்த்தகிரி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அச்சமயம் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் 'செங்குந்தரும் சைவமும்' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு உபந்யாசஞ் செய்தனர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

(1) நம்மவரிடையே புத்துணர்ச்சி மிகுதியும் உண்டாகுமாறு கூடிய சீக்கிரம் மகாநாடு ஒன்று கூட்டுவிக்கும்படி தலைச்சங்கத்தை இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) நம்மினத்தவரிடையே நிலையாய் நின்று பெருந்தீங்கு விளைவித்துவரும் கக்ஷிப் பிரதிகக்ஷிகள் ஒழிந்து ஒற்றுமை உண்டாவதற்கான முறையில் முயலுமாறு நமது தலைச்சங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

இரவு 11-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

மா. அ. கனகசபை முதலியார், காரியதரிசி.

## திருச்சி ஜில்லாவில் கிளர்ச்சி.

### கட்டிப்பாளையம்.

விபவஸு ஆடிமீ 31௳ 15-8-28 தேதி அமாவாசையன்று கட்டிப்பாளையம் செங்குந்த மகாஜன சபையானது மாலை 6-மணிக்குக் கூட்டப்பட்டது. இச்சபைத்தில் கட்டிப்பாளையம் திருக்காடுதுறை செங்குந்தர்களும் விஜயம் செய்திருந்தனர். தவிர வருடமற்ற அங்கத்தினர்களும் சேர்ந்து 60 பேர்களைக் கூடியிருந்தனர். திரு. மா. சிவகிரி முதலியார் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கடவுள் ஸ்துதி பாடியபின் முன்கூட்ட நடவடிக்கைகள் காரியதரிசியால் வாசித்துக் காட்டப்பெற்றன. பின்பு அடியார்களை வழிபடுதல், அன்பு, ஆசாரம் முதலியவைகளைப் பற்றியும் தேவாரம் திருவாசகம் இவைகளைப்பற்றியும் திரு. வை. பழனியப்ப முதலியார் அவர்களால் 8-மணி வரை உபந்நியாசம் செய்யப்பட்டது. பிறகு இரவு 10½-மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

ப. ஆறுமுகமுதலியார், காரியதரிசி.

## திருநெல்வேலி ஜில்லாவில் கிளர்ச்சி.

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், அம்பாசமுத்திரம்.

(10-8-28) சுக்கிரவாரம் இரவு எட்டு மணிக்கு மாதாந்தர இரண்டாவது கூட்டம் சங்கத் தலைவர் திரு. வேலாயுத முதலியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க் கூடிற்று. முதலில் செங்குந்தர் தேவாரகோஷ்டி மாணவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டுக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சங்கக்காரியதரிசி சபையோருக்குச் சந்தா வசூல் செலவு கணக்குகளையும் முன் கூட்ட நடவடிக்கைகளையும் வாசித்துக் காட்டினர். பின் 'செங்குந்தரும் சிவபூடணமும்' என்ற வியாசத்தை நம்மித்திரனில் ஒரு பகுதியிலிருந்து திரு. சு. ஆறுமுக முதலியார் வாசித்துக் காட்டினர். கோஷ்டி மாணவன் ஆவுடையப்பன் 'சைவ ஒழுக்கம்' என்னும் அரிய விஷயத்தைப்பற்றி மிகத்தெளிவாகப் பேசினன். பின்னர் 'பெறுதற்கரிய பிறப்பும் அடைதற்குரிய சிறப்பும்' என்ற அரிய பெரிய விஷயமாய்க் கோஷ்டிமாணவன் வேலாயுதம் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினன்.

சங்கத் தலைமைக் காரியதரிசி திரு. சி. வ. ரா. அருணாசல முதலியார் அவர்கள் நல்லொழுக்கம் என்ற விஷயம் பற்றித் தென்மாரி பொழிந்தாற்போல் என் போன்ற இளைஞர்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு பிரசங்கம் செய்தார்கள். திரு. ச. க. அகஸ்திய முதலியாரவர்கள் பொதுவிஷயம் என்ற தலைப்பின்கீழ் பேசியது மிகவும் போற்றத்தக்கது. இறுதியில் தலைவர் அவர்கள் பின்னுரை நிகழ்த்திய பின்னர் சென்ற கூட்டத்தில் நிறைவேற்ற வேணுமாய்க் கொண்டுவந்த தீர்மானங்களில் வியாபாரிகளிடமிருந்து மகமை வசூல் செய்து சங்கத்திற்குச் சேர்க்க வேண்டியது அவசியமென்பது வருகிற ஆவணிமீ 13௳ நம குலதிலகர் ஒட்டக்கூத்தர் திருநட்சத்திர தினத்தைக் கொண்டாட வேணுமென்பது ஆகியன தாய் நீண்டதோர் கரகோஷத்துடன் சபையில் நிறைவேறின. திரு. தலைவர் அவர்களும் ஆவணிமீ முதல் மகமை வைத்துச் சங்கத்திற்கு உதவுவதாக வாக்களித்துள்ளார்கள்.

காரியதரிசி திரு. கு. சிவராமலிங்க முதலியாரவர்களால் சபையோர்களுக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு, கோஷ்டி மாணவர்களால் கடவுள் வாழ்த்து பாடப்படக் கூட்டம் இனிது நிறைவேறியது.

ரா. ம. ராமலிங்க முதலியார், காரியதரிசி.

---


வளம்பரம்

# சுதந்தரன்

ஆசிரியர்:

சு. நா. சுந்தர முதலியார்

இது இரங்கூனில் வாரந்தோறும் வெளிவரும் ஒரு அரிய செந்தமிழ்ப் பத்திரிகை. தேசீய உணர்ச்சி நிரம்பியது. பர்மாவிலும் மலேய நாடுகளிலும் இந்தியாவிலும் உள்ள தமிழர்களுக்கு ஒரு சிறந்த ஞானதீபிகையெனவும் சுதந்தரக்கொடி யெனவும் விளங்குவது. விளம்பரங்களுக்கு ஏற்ற தகுதியுடையது.

சந்தா விகிதம்

| உள்நாட்டில். | வெளிநாட்டில். |
| --- | --- |
| 1 வருஷத்துக்கு 5 0 0 | 1 வருஷத்துக்கு 6 0 0 |
| 6 மீ தத்துக்கு 2 8 0 | 6 மீ தத்துக்கு 3 0 0 |

மானேஜர்:

"சுதந்தரன்" ஆபீஸ்,
39/37-வது வீதி, ரயில்வே பிளாக், இரங்கூன்.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துக்கு ஆகஸ்டு மாதத்தில் வந்த உண்டியல், மகமை, நன்கொடை, கிளைச்சங்கக் கட்டண வரவு விவரங்கள்

### சென்னை உண்டியல் வசூல்.

| | | | |
|---|---|---|---|
| தி.ச. ரா. ராமசாமி முதலியார் சென்னை | 10 | 0 | 0 |
| S.K.M. காயாரோகண ஷ் ,, | 41 | 12 | 0 |
| மதராஸ் பளயகாட் கம்பெனி ,, | 49 | 9 | 0 |

### சைதாப்பேட்டை மகமை வசூல்.

| | | | |
|---|---|---|---|
| பெஸ்ட் பளயகாட் கம்பெனி ஆனிக்கு | 10 | 15 | 3 |
| ஆடிக்கு | 10 | 4 | 3 |
| நாஷனல் பளயகாட் கம்பெனி வைகாசி, ஆனி, ஆடி | 17 | 10 | 6 |
| S. சடையப்ப முதலியார் கம்பெனி வைகாசி, ஆனி, ஆடி | 2 | 2 | 6 |
| உ. அரு. அருணசல முதலியார் வைகாசி, ஆனி | 3 | 0 | 0 |

### கிளைச்சங்கக் கட்டணம்.

| | | | |
|---|---|---|---|
| காஞ்சி வாலிபர் | 10 | 0 | 0 |
| மணிமங்கலம் | 5 | 0 | 0 |
| மதுரை | 10 | 0 | 0 |
| மண்டலமாணிக்கம் | 10 | 0 | 0 |

மாணவர் உபகாரச் சம்பளத்துக்காக எழுதியனுப்பிய விண்ணப்பங்களுக்கு இசைந்து திருவாளர் புதுவை ஆ. வே. முத்தையாமுதலியார் B.A., B.L., அவர்கள் மாதம் மாதம் ஐந்து ரூபாய் அனுப்புவதாகவும், ஆதோனி சால்ட் சப் இன்ஸ்பெக்டர் திருவாளர் ம. திருநாவுக்கரசு முதலியார் B.A., அவர்கள் மாதம் மாதம் ஒரு ரூபாய் அனுப்புவதாகவும் வாக்களித்துள்ளார்கள். அவர்களுக்கு நமது சங்கத்தின் நன்றி உரித்தாகும்.

தி. நா. சபாபதி முதலியார்,
ம. சண்முகசுந்தர முதலியார்,
அமைச்சர்கள்.

### விபவஷு ஆனி மாதத்துக்கு மதராஸ் பளயகாட் கம்பெனி மூலம் உண்டியல் வசூலான விவரம்.

#### ஆனக்காபுத்தூர்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஆ. கு. முனுசாமி முதலியார் | 0 | 9 | 0 |
| ர. மு. முருகேச முதலியார் | 0 | 13 | 0 |

#### குண்ணத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| கி. ஜெகநாத முதலியார் | 2 | 0 | 0 |
| தி. ஒ தேவராஜ முதலியார் | 0 | 7 | 3 |

#### சைதாப்பேட்டை.

| | | | |
|---|---|---|---|
| சே. பழனி முதலியார் | 0 | 10 | 0 |
| அ. கு. முருகப்ப முதலியார் | 0 | 8 | 6 |
| ரெ. போரூரா முதலியார் | 0 | 5 | 3 |
| ரெ. குப்புசாமி முதலியார் | 0 | 2 | 3 |
| தி. அ. கந்தசாமி முதலியார் | 1 | 6 | 0 |
| ப. மாணிக்க முதலியார் | 0 | 9 | 0 |
| ந. தங்கவேலு முதலியார் | 0 | 7 | 6 |
| ஆ. த. வைத்தியலிங்க முதலியார் | 0 | 10 | 9 |
| ம. கு. மாணிக்க முதலியார் | 0 | 4 | 0 |
| பெ. மு. மாணிக்க முதலியார் | 0 | 7 | 3 |
| ஆ மு. சரவண முதலியார் | 0 | 2 | 0 |

#### சேம்பாக்கம்.

| | | | |
|---|---|---|---|
| அ. வேதாசல முதலியார் | 0 | 10 | 3 |

#### திருமழிசை.

| | | | |
|---|---|---|---|
| ஐயா முனுசாமி முதலியார் | 0 | 7 | 3 |

#### பரங்கிமலை.

| | | | |
|---|---|---|---|
| வே. மு. கண்ணப்ப முதலியார் | 2 | 0 | 3 |
| ஆ. பொன்னுசாமி முதலியார் | 0 | 14 | 3 |
| அ. ரெத்தின முதலியார் | 0 | 7 | 0 |

#### பம்மல்.

| | | | |
|---|---|---|---|
| தி. வைத்தியலிங்க முதலியார் | 0 | 4 | 3 |

#### படப்பை.

| | | | |
|---|---|---|---|
| தொ. மு. திருமலை முதலியார் | 0 | 5 | 3 |

#### மேப்பூர்.

| | | | |
|---|---|---|---|
| கா. சிவானந்த முதலியார் | 0 | 14 | 9 |
| பொ. நடேச முதலியார் | 0 | 4 | 0 |
| சோலை. முருகப்ப முதலியார் | 0 | 2 | 6 |
| மு. சண்முக முதலியார் | 0 | 6 | 3 |

#### வேளச்சேரி.

| | | | |
|---|---|---|---|
| க. துரைசாமி முதலியார் | 0 | 5 | 6 |
| மதராஸ் பளயகாட் கம்பெனி உண்டியல் வசூல் | 20 | 0 | 0 |


60-க்கு மேற்பட்ட உலக பிரசித்திபெற்ற

# அசல்



# ஷண்முகம் பட்டணம்பொடி

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

இந்தியாவில் சிறப்பு வாய்ந்த ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்று, தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று, அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களைச் சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதலிய குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதுரை.

முதல் தரமானது
பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் ரூ.அ.பை. | தபால் சார்ஜு ரூ.அ.பை. | பாக்கிங் ரூ.அ.பை. | மொத்தம் ரூ.அ.பை. |
|---|---|---|---|---|
| 8 | 1 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 0 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 0 |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீசை 1-க்கு ரூ. 3. ஸ்பெஷல் சரக்கு வீசை 1-க்கு ரூ. 4.
பாக்கிங் சார்ஜும் தபால் கூலியும் பிரத்தியேகமானது.

விநோத கதாமஞ்சரி, வெளிவந்து விட்டது!

## மாப்பிள்ளை மருமகளாதல்

நூலாசிரியர்: பண்டித கதாரத்ன
சே. கிருஷ்ணசாமி சர்மா.

தமிழ்நாடு வெகு நாட்களாய் எதிர்பார்த்திருந்த அரிய புத்தகம் இதுவே. இது நாவல் அல்ல. புராணமல்ல. வேதாந்தமல்ல. காவ்யமல்ல. பிரபந்தமல்ல. இது ஒரு விநோத கதா களஞ்சியம். புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியது முதல் முடியும்வரையில் மனதின் உற்சாகம் மிதமற்றிருக்கும். அநேக தடவைகள் படித்தாலும் ஆவல் தீராது. ஆண் பெண் அனைவரு மறியத்தக்க விஷயங்கள் அநேகமிருக்கின்றன. தமிழ்மக்கள் இதுவரை இவ்வித புத்தகம் படித்திருக்க மாட்டார். சில காபிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

ரப்காகிதம் ரூ. 1—0—0
கிளேஸ் காலிகோ ரூ. 1—8—0

ஜீ எஸ். சாஸ்திரி அண்டு கோ.
தபால்பெட்டி நெ. 110, சென்னை.

## விளம்பரம்.

'ஆரம்பாசிரியன்,' 'செங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியர்
ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
இயற்றிய தமிழ் நூல்கள்.

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 1. | சிறுவர்க்கான சிறு கதைகள் : முதற்புத்தகம் ... | 0 | 3 | 0 |
| 2. | ,, இரண்டாம் புத்தகம் ... | 0 | 3 | 0 |
| 3. | சிறு பொறி பெருந்தீ ... | 0 | 4 | 0 |
| 4. | பொறாமைப் பேய் ... | 0 | 4 | 0 |
| 5. | செய்யுட் கதைகள் ... | 0 | 12 | 0 |

முதல் நான்கும் வெகு இனிமையாய் மிகவும் எளிய நடையில் பிரைமெரி பாடசாலைகளில் கதா வாசகங்களாக உதவுமாறு எழுதப் பெற்றவை. ஐந்தாவது மேல் வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக உதவும். இவை உபாத்தியாயர்களுக்கு நூற்றுக்கு இருபது தள்ளிக் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம் :
டீசர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ்,
200, தம்பு செட்டித் தெரு, சென்னை.

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

ஸ்ரீஸ்ரீ கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

விபவஸு ஆவணிமீ, புரட்டாசிமீ (1928ஸு செப்டம்பர்மீ)

தக்ஷிணாயனம், வருஷரிது, சிம்மமூ, கன்னி, கலி-5030, சாலி 1851, பசலி 1338, பிரபவ 2.

| செப்டம்பர். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | வாரசூன்ய திதி. | யோகினி. | விரதாதி முதலிய சுப தினங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | சனி | பிர, 0-50 துவி, 55-55 | பூ, 25-28 | ம, 25-28 சி | 2 | 1 | துதி | மேற் | குரு / செவ் ராகு |
| 2 | 18 | ஞா | திரி, 50-25 | உ, 22-5 | அ, 60 | 2 | 1 | திரி | வ-கி | 2-மிது. செ |
| 3 | 19 | திங் | சது, 44-40 | சே, 18-23 | சி, 60 | 2 | 1 | சது | ஆகா | 6-துல. பு |
| 4 | 20 | செவ் | பஞ், 38-53 | அ, 14-30 | சி, 60 | 2 | 1 | பஞ் | பூமி | 8-துல. சுக் |
| 5 | 21 | புத | ஷஷ், 33-10 | ப*, 10-40 | சி, 10-40 அ | 2 | 0 | ஷஷ் | கிழ | |
| 6 | 22 | வியா | ஸப், 27-43 | கி, 7-0 | சி, 60 | 2 | ½ | சப் | வட | சனி கேது / சூ-பு சுக் |
| 7 | 23 | வெ | அஷ், 22-40 | சோ, 3-43 | ம, 3-43 சி | 1 | ½ | அஷ் | தெ-கி | |
| 8 | ஆவணி 24 | சனி | நவ, 17-58 | மி, 0-43 தி, 58-8 | சி, 60 | 1 | ½ | நவ தச | தெ-மே | |
| 9 | 25 | ஞா | தச, 13-40 | பு, 56-5 | சி, 60 | 1 | ½ | ஏகா | தெற் | சர்வ முகூர்த்தஞ்செய்ய |
| 10 | 26 | திங் | ஏகா, 9-53 | பூ, 54-33 | சி, 60 | 0 | ½ | துவா | மேற் | செருத்துணை நாயனார் |
| 11 | 27 | செவ் | துவா, 6-38 | ஆ, 53-40 | சி, 60 | 0 | ½ | திர | வ-மே | புகழ்த்துணை அதிபத்தர் |
| 12 | 28 | புத | திர, 4-8 | ம, 53-43 | சி, 58-43 அ | 0 | 0 | சது | வ-கி | இளையான்குடி மாற நாய |
| 13 | 29 | வியா | ச●, 2-40 | பூ, 54-45 | சி, 54-45 ம | 0 | 0 | அமா | ஆகா | சர்வதர அமாவாசை ஞர் |
| 14 | 30 | வெ | அமா, 2-5 | உ, 57 0 | சி, 57-0 அ | 0 | 0 | பிர | பூமி | சம்பந்தர் திருநக்ஷத்திரம் |
| 15 | 31 | சனி | பிர, 3-5 | அ, 60 | ம, 60 | 0 | 0 | துதி | கிழ | கன்னி ரவி 49 55 சாவே உபாகர்மம் |
| 16 | 1 | ஞா | துவி, 5-23 | அ, 0-45 | அ, 0-45 சி | 0 | 0 | மூன் | வட | ஜோதிடம் பார்க்க |
| 17 | 2 | திங் | திரி, 9-5 | சி, 5-58 | பி 5-53 அ | 0 | ½ | சது | தெ கி | கணபதி விரதம் |
| 18 | 3 | செவ் | சது, 14-5 | சு, 12 18 | 12-13 ம | 0 | ½ | பஞ் | தெ-மே | ரிஷிபஞ்சமி |
| 19 | 4 | புத | பஞ், 20-10 | வி, 19 35 | சி, 60 | 1 | ½ | ஷஷ் | செற் | தானியம் செலவிட |
| 20 | 5 | வியா | ஷஷ், 26-40 | அ, 27-28 | சி, 27-28 பி | 1 | ½ | ... | மேற் | வாசக்கால் வைக்க 5 நாள் மழை பெய்யும் |
| 21 | 6 | வெ | ஸப், 33-5 | கே, 35-13 | ம, 35-13 அ | 1 | ½ | சப் | வ-மே | சௌரி பூஜை |
| 22 | புரட்டாசி 7 | சனி | அஷ், 38-45 | மூ, 42-5 | சி, 60 | 1 | ½ | அஷ் | வ-கி | நந்த நவமி |
| 23 | 8 | ஞா | நவ, 42-58 | பூ, 47-43 | சி, 47-43 அ | 2 | ½ | நவ | ஆகா | சாஸ்வதி பூஜை |
| 24 | 9 | திங் | தச, 45-25 | உ, 51-35 | ம, 51-35 அ | 2 | 0 | தச | பூமி | ஏனாதி நாயனார் |
| 25 | 10 | செவ் | ஏகா, 45-0 | தி, 53-30 | சி, 60 | 2 | 1 | ஏகா | கிழ | சர்வத்ர ஏகாதசி |
| 26 | 11 | புத | துவா, 44-35 | அ, 53-28 | பி, 53-28 சி | 2 | 1 | துவா | வட | சடம் விலக்க |
| 27 | 12 | வியா | திர, 41-13 | ச, 51-40 | ம, 51-40 சி | 2 | 1 | திர | தெ-கி | நரசிங்கமுனை நாயனார் |
| 28 | 13 | வெ | சது, 36-23 | பூ, 48-20 | சி, 60 | 2 | 1 | சது | தெ-மே | அனந்த விரதம் |
| 29 | 14 | சனி | பௌ○ 30-28 | உ, 43-58 | சி, 43-58 | 2 | 1 | பௌ | தெற் | உமாமஹேஸ்வர விரதம். |
| 30 | 15 | ஞா | பிர, 23.30 | ரே, 38-50 | அ, 38-50 சி | 2 | 1 | பிரத | மேற் | மாளயபக்ஷ ஆரம்பம் |

செப்டம்பர்மீ 1உ சிராவண பகுளம், 2உ சர்வ முகூர்த்தம், 3உ அவமாகம், 4உ வியாதியஸ்தர் குளிக்க, 5உ கிருத்திகை, 6உ கோகுலாஷ்டமி, 7உ கிருஷ்ண ஜயந்தி, 8உ-மாங்கல்ய, 9உ சர்வ முகூர்த்தம், ஆவணிமீ 18உ விவாஹம், குருப்ரீதி, 19உ திருச்செந்தூர் தவஜா ரோஹணம் 22உ இராமநாதபுரம் கிருஷ்ணன் பிறப்பு வைபவம், 25உ விவாஹம் செவ்வாய்ப்ரீதி, 26உ விதை விதைக்க 28உ வேதாரண்யம் அர்த்தநாரீஸ்வரர் தீர்த்தவாரி, திருச்செந்தூர் தீர்த்தவாரி, புரட்டாசிமீ 2உ திருப்பதி தவஜா ரோகணம், 6உ கருடசேவை, 8உ இரதோற்சவம், 13உ நடராஜர் அபிஷேகம், திருநெல்வேலி சைவ சித்தாந்தப் பஞ்சாங்கத்தின்படி ஆவணிமீ 4உ ஞாயிற்றுக்கிழமைதான் விநாயக சதுர்த்தி, புரட்டாசிமீ 2உ விநாயக சதுர்த்தி செய்வது உலக கஷ்டப்பாடேயாகும், (புரட்டாசிமீ 8உ சாஸ்வதி பூஜை.)

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு வகுப்பினரும் சீரடையவேண்டிச் சங்கங்கள் பல நிறுவி வெகு ஊக்கத்துடன் உழைத்து வரும் இக்காலத்தில் பண்டைப் புகழ்பெற்ற செங்குந்த குல மக்கள் மட்டும் இது விஷயத்தில் யாதொரு ஊக்கமுமின்றிக் கிடப்பதையுன்னி, நமது குல முன்னேற்றத்திற்கென உழைக்கச் சென்னையில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றது. இம்மகாஜனசங்கம் நமது குலமக்கள் கல்வி, ஒழுக்கம், செல்வம், அந்தஸ்து முதலியவற்றில் மேன்மை யடையும் வழியைத் தேடிவருகின்றது.

குலத்தொண்டு செய்துவருவதே இம்மகாஜனசங்கத்தின் நோக்கமாதலால் அது நிறைவேறத் தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் உதவியும் ஆதரவும் அவசியமாகையால், மகாஜன சங்கத்தார் தற்போது செங்குந்தர் வதியும் கிராமங்கள் தோறும் பிரசாரவேலை செய்து வருகின்றனர். பிரசாரகர்களைத் தங்கள் கிராமங்களுக்கு வரவழைக்க விரும்பும் குலாபிமானிகள் சங்க அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுவார்களாக.

---


முதல்தரமான வேலைப்பாடு! நம்பிக்கையான வேலைக்காரர்கள்!!

## நகைகள்! நகைகள்!

### குறைந்த சார்ஜுகள்.

நாங்கள் சிமைக்கமலங்களிலும், இதர கற்களிலும் குறைந்த கூலியில் கண்களைக் கவரும்படியான விதமாய் வேலைகள் செய்து கொடுக்கிறோம். தவிர நாங்களே உங்கள் மனதிற்குப் பிடித்த நல்ல கற்களையும் வாங்கிக்கொடுக்கிறோம். இதர பொன் வெள்ளி வேலைகளும் மெடல்களும், என்கிரேவிங் வேலையும் செய்து குறித்த காலம் தவறாமல் கொடுக்கின்றோம். எங்களிடம் ஒருதரம் ஆர்டர் செய்து பாருங்கள். ஒருமுறை ஒரு சிறிய ஆர்டர் கொடுத்துப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

ஆர்டர் வாங்கிக்கொள்ளும் நேரம் காலை 7-மணி முதல் 8-30-மணிவரையில்.

ராஜரத்தினம் பிரதர்ஸ்,
நகைவேலைக்காரர்கள், நெ. 8, இரண்டாவது தெரு, புதுப்பேட்டை, மதராஸ்.


---


## இரகஸ்யம்

ஒரு யோகீஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்டது அநேகம் பிரபுக்கள் பரீட்சை செய்து நற்காட்சி பத்திரங்களும் அளித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அதிக பிரயோஜன ...நத் தரத்தக்கதாதலால் இது உலோகோபகாரமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது தளர்ந்த தேகத்தைக் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு வலுவேற்றித் தேகபுஷ்டி கை, கால், இடுப்பு, மார்பு, முதலிய உருப்புகளின் வலிவு, சுறுசுறுப்பு, சந்தான உற்பத்தி, பேரானந்தம், மனோதைரியம் முதலியவைகளை உண்டுபடுத்தி, மெலிந்து தளர்ந்துபோன வயோதிகரும் வாலிபருடைய சகல சுகங்களையும் அனுபவிக்கச் செய்யும் மேகவெட்டை, வாய்வு, மலபந்தம், பசியின்மை முதலிய வியாதிகளை நீக்கி, தேகாரோக்கியத்தை உண்டாக்கிவிடும். ஒரே வேளை மருந்தில் சொப்பனஸ்கலிதம் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கித் தாதுவை வஜ்ஜிரத்தைப்போல் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு முறுக்கேற்றி ரகஸிய இன்பத்தை உண்டாக்கி விடுமென்பது உண்மை. இதற்குப் பத்தியமில்லை. புட்டி 1-க்கு இரண்டு ரூபாய் மூன்று புட்டி வாங்கினால் தபால்செலவு கிடையாது. இவ்வற்புத சஞ்சீவியின் பெயர் கற்பகவிந்தாதி லேகியம்.

வேண்டுவோர்,
மானேஜர், கற்பக மெடிகல் ஹால்,
சுவாமிமலை போஸ்ட், S. இந்தியா என்னும் விலாசத்திற்கு எழுதவும்.